விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 112 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 27 வியாழக்கிழமை (10.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






### மாகாண சபைத் தேர்தல் முடிந்ததும்
## புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் - பிரதமர்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் முடிந்ததும் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று பாராளுமன்றத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்றுக் காலை பிரதமரின் கேள்வி நேரத்தின்போது, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற 15



## பயங்கரவாதச் சட்டத்தை ஆராய குழு நியமிக்க முடிவு
### அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் - ஹரிணி

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்வது குறித்து ஆராய்வதற்காக ஒரு குழுவை நியமிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று பாராளு 15

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கிடைக்கும்
### பாராளுமன்றத்தில் பிரதமர் ஹரிணி உறுதி



(கொழும்பு)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளதாக பாராளுமன்றத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கான கேள்வி நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக கேள்விகளை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் ஹரிணி அமரசூரிய மேற்கண்டவாறு தெரி 02

### அமெரிக்காவின் வரியால்
## பாரிய பொருளாதார நெருக்கடியில் இலங்கை
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)



அமெரிக்கா அமுல்படுத்தியுள்ள புதிய வரி விதிப்பால் இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடியை முகங்கொடுக்க நேரிட்டுள்ளது என எதிர்க் 04

### ஓமந்தையில்
## மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. 15

## 304 கிலோ கஞ்சா கிளிநொச்சியில் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-உடுத்துறை கடற்பகுதியில் சுமார் 304 கிலோ கிராம் கேரள கஞ்சா நேற்று மீட்கப்பட்டுள்ளது. 15



### வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள
## சொத்துக்கள் மீளப் பெறப்படும்
### பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால

(கொழும்பு)

நாட்டிலிருந்து மோசடி ரீதியாக எடுத்துச் செல்லப்பட்ட பெரியளவிலான சொத்துக்கள் மற்றும் செல்வங்கள் நாட்டிற்குத் திருப்பிப் பெறப்படும் எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். 15



### ஜனாதிபதி தலைமையில்
## கட்சித் தலைவர் கூட்டம் இன்று
### அமெரிக்க வரியின் தாக்கம் தொடர்பில் ஆராய்வு

05ஆம் பக்கம் பார்க்க

### ஜனாதிபதி அநுர தலைமையில்
## தேசிய ஊழல் எதிர்ப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

2025 - 2029 தேசிய ஊழல் எதிர்ப்பு வேலைத்திட்டம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கான நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. 15

### விபசார நடவடிக்கை என முறைப்பாடு
## நாவற்குழியில் 3 பெண்கள் உட்பட நால்வர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் சந்தேகத்திற்கிடமான முறையில் தங்கியிருந்த மூன்று பெண்களும் ஆண் ஒருவரும் நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு



திருமதி கம்சவதனி
சிறிகணேசராசா
(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி)

ஆசிரியர் சேவைக்காலம்
*15.03.1990 - 08.04.2025*

**சேவை விபரம்**

- முல்/ கோட்டை கட்டிய குளம் அ.த.க.பா (15.03.1990 – 28.10.1992)
- யா/ நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாலயம் (29.10.1992 – 01.05.1994)
- யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம் (02.05.1994 – 02.02.1997)
- யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை (03.02.1997 – 02.02.1999)
- யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம் (03.02.1999 – 16.01.2002)
- யா/ வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம் (17.01.2002 – 31.12.2004)
- யா/ ஒஸ்மானியாக் கல்லூரி (01.01.2005 – 19.02.2015)
- யா/ நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் (20.02.2015 – 08.04.2025 வரை)

தனது 60 தாவது வயதில் 35 வருடகால ஆசிரியப் பணியில் இருந்து 08.04.2025 செவ்வாய்க்கிழமை ஓய்வுபெற்ற ஆசிரியையின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன் இவரது ஓய்வுக்காலம் சிறப்புற மனமுவர்ந்து வாழ்த்துகிறோம்.

*வாழ்த்துவோர்:-* ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

(3915)


## காணாமல்...

வித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக் கையில்,


காணாமல் போனோர் பிரச்சினை யால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. இருப்பினும் இந்த விசாரணைகளை நாங்கள் தனிப்பட்ட அடிப் படையில் நடத்த முடியாது. மேலும் இதுபோன்ற விடயங்கள் சட்ட ரீதியாகவும் நிறுவன ரீதியாகவும் தீர்க் கப்பட வேண்டும்.

இழப்பீடுகளுக்கான அலுவலகம் மற்றும் காணாமல் போனோர் அலுவலகம் ஆகியவை பெயரளவில் மட்டுமே நிறுவப்பட்டதாலும்போதுமான பலம் இல்லாததாலும் பெரும்பாலும் பயனற்றவையாக இருந்தது.

பொதுமக்கள் அவற்றின் மீது நம்பிக்கையை இழந்துவிட்டனர். கடந்த காலத்தில் இதுதான் நடந்தது. அது தான் சரிசெய்யப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. எனவே, சரியான நபர்கள் பதவிகளில் அமர்த்தப்படுவதையும் போதுமான வளங்கள் ஒதுக் கப்படுவதையும் நிறுவனங்கள் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றும் திறன் கொண்டவை என்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

காணாமல் போனவர்கள் தொடர் பான சட்டபூர்வ பிரச்சினைகள் இன்னும் நிலுவையில் இருப்பதை ஒப்புக் கொண்ட பிரதமர் இந்த வழக்குகளில் சில கடந்த 16 ஆண்டுகளாக சர்ச்சையில் உள்ளன என்றும் இது எளிதான காரியம் அல்ல ஆனால் நீதியை உறுதி செய்வதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது என்றும் தெரிவித்தார்.(ம-7,4)


# மணிவிழா வாழ்த்து



திரு.
செல்வராசா
சுகேந்திரன்
Bsc [Special in Physics]
Dip in Ed, M.Ed,
Dip in Management

**சேவை விபரம்**

| | |
|---|---|
| யா/ நயினாதீவு மகா வித்தியாலயம் | - 30.07.1998 - 24.01.1999 |
| யா/ சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மகா வித்தியாலயம் | - 25.01.1999 - 16.06.2002 |
| யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி | - 17.01.2002 - 04.05.2010 |
| யா/ இந்து மகளிர் கல்லூரி | - 05.05.2010 - 29.11.2017 |
| யா/ கோண்டாவில் இந்துக்கல்லூரி | - 30.11.2017 - 09.04.2025 |

எமது கல்லூரியில் பௌதிகவியல் பாட ஆசிரியராக கடமையாற்றி இன்று 10.04.2025 அகவை அறுபதில் தடம் பதிக்கும் மணிவிழா நாயகனை நோய் நொடியின்றி ஆரோக்கியமாக நீண்ட காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்...
நலன்புரிக் கழகம், யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி

(3905)



உ
தில்லையம்பதியாள் துணை
சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில்
ஈழத்து தில்லையம்பதி
அருள்மிகு
ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

## பங்குனி உத்தர பெருவிழா - 2025

*ராகம் :- கல்யாணி*

ஆலரசு மரத்தின் அருள்மிகு பொந்தினூடே
ஆனந்தக் கலசம் காட்டும் அம்பிகே சிவகாமி
பாலாபிஷேகம் செய்தோம் பங்குனித் திருநாளில்
பௌர்ணமித் திருவிளக்கின் ஜோதியான கல்யாணி



**பங்குனி உத்தர நவோத்திர சகஸ்ர 1008 சங்காபிஷேகம்**

11.04.2025 வெள்ளி காலை 8.00 மணிக்கு ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கும் சுற்றுப்பிரகார, பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம், விசேட பூஜை, நண்பகல் மகேஸ்வர பூஜை (அன்னதானம் இடம்பெறும்)

மாலை 6.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை, திருவூஞ்சல்

மாலை 7.00 மணிக்கு ஸ்ரீ விநாயகப் பெருமான், ஸ்ரீ சிவகாமி அம்பாள், வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ முருகப் பெருமான் பூந்தண்டிகையில் தெருவீதி உலா வரும் அருட்காட்சியும் இடம்பெறும்

**விழா உபயம்**
**அரச ஊழியர்களும் ஓய்வூதியம் பெறுபவர்களும்**

"தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்"
திருக்கோயில் - பரிபாலன சபை

(C-2660)



# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
12 . 10 . 1958



மறைவு
11 . 03 . 2025

கடந்த 11.03.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமெய்திய

## அமரர் ரதிகா செல்வரத்தினம்

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்வு இன்று 10.04.2025 வியாழக்கிழமை முற்பகல் 09:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ள சபிண்டீகரண ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து எமது துயரில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலை பேசி வாயிலாக ஆறுதல் கூறியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

15. குளப்பிட்டி லேன்,

தகவல்:
திருமதி ரேணுகா விஜயவர்மன்
(EXPO VIDEO COMPLEX)

(1010)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரெண்டாகும் 'ஜிப்லி' படங்கள்
## நிபுணர்கள் விடுத்துள்ள எச்சரிக்கை

(கொழும்பு)

**புகைப்படம், கைபேசி எண் போன்ற தகவல்களை வைத்து மோசடிகள் அதிகரித்து வரும் நிலையில், எந்த செயலியை பயன்படுத்துவதாக இருந்தாலும் அதில் உள்ள ஆபத்துகளையும் அறிந்து கவனமாகக் கையாள வேண்டும் என நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

தற்போது உலகளவில் அனைவரையும் ஜிப்லி படங்கள் ஆட்கொண்டுள்ள நிலையில் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

1985 ஆம் ஆண்டு ஜப்பானை சேர்ந்த ஹாயாவோ மியாசாகி, 'ஜிப்லி ஸ்டுடியோ' என்ற திரைப்பட நிறுவனத்தை தொடங்கி, கார்டூன்களை கைகளால் வரைந்து அதை அனிமேஷன் படங்களாக எடுக்கத் தொடங்கினார்.

தற்போது 40 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் ஜிப்லி படங்கள் ட்ரெண்ட் ஆகி வருகிறது.

Open AI நிறுவனத்திற்கு சொந்தமான ChatGPT, ஜிப்லி படங்களை இலவசமாக உருவாக்கி தருவதால், குழந்தைகள் தொடங்கி, சினிமா கிரிக்கெட் பிரபலங்கள், பிரதமர் மோடி, எலான் மஸ்க் வரை தங்களது ஜிப்லி படங்களை உருவாக்கி சமூக ஊடகங்களில் பகிர்ந்து வருகின்றனர்.




முதலில் சந்தா செலுத்துபவர்களுக்கு மட்டுமே இந்த வசதியை வழங்கிய Chat GPT, தற்போது அனைத்து பயனர்களும் இலவசமாக ஜிப்லி படங்களை உருவாக்க அனுமதித்தது.

இதனால் ஒரு மணி நேரத்தில், 10 லட்சத்திற்கும் அதிகமான பயனர்கள் ChatGPT யை பயன்படுவதாக அதன் நிறுவனர் சாம் ஆல்ட்மென் தெரிவித்துள்ளார்.

அத்துடன், எக்ஸ் (X) தளத்தின் GROK, Google நிறுவனத்தின் Gemini, பயனர்கள் இலவசமாக ஜிப்லி படங்களை உருவாக்கும் வசதியை வழங்கியதால், இணையவாசிகள் தங்களது ஜிப்லி படங்களை உருவாக்கி சமூக வலைத்தளம் எங்கும் பதிவிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், பயனர்கள் ஜிப்லி படங்களை உருவாக்க, தங்களது புகைப்படங்களை ChatGPT போன்ற தளங்களுக்கு வழங்குவதன் மூலம் தனியுரிமை பாதிப்பு குறித்து நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்தப் புகைப்படங்களை உங்கள் அனுமதியின்றி, அந்த நிறுவனங்கள் தங்கள் AI செயலிகளுக்கு பயிற்சி அளிக்க பயன்படுத்த வாய்ப்புள்ளதோடு, உங்கள் புகைப்படங்களை அடிப்படையாக வைத்து AI அவதூறான படங்களை உருவாக்கவும் வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

பயனர்கள் படங்களை வழங்குவதன் மூலம், meta data, இருப்பிடம் போன்ற முக்கிய தகவல்களும் AI நிறுவனங்களுக்கு கிடைக்க வாய்ப்புள்ளது என எச்சரிக்கை விடுத்துள்ளனர். (நி-8)

# விதி மீறல் தொடர்பில் 13 வேட்பாளர்கள் கைது

(கொழும்பு)

கடந்த மார்ச் 3 ஆம் திகதி முதல் தேர்தல் சட்டங்களை மீறியதற்காக எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் 13 வேட்பாளர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 42 அரசியல் கட்சி ஆதரவாளர்களும் 11 வாகனங்களும் பொலிஸாரால் கைது மற்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் நேற்றுக் காலை 6 மணி வரை ஒரு வன்முறை சம்பவம், 12 தேர்தல் சட்ட மீறல் சம்பவங்கள் குறித்து பொலிஸ் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த கால கட்டத்தில் ஒரு வேட்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கிடையில், மார்ச் 3 முதல் மொத்தம் 24 வன்முறை சம்பவங்கள் மற்றும் 99 தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக பொலிஸில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (நி-8)

# பாடசாலை விடுமுறை குறித்து கல்வி அமைச்சின் தகவல்

(கொழும்பு)

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளின் முதலாம் தவணையின் 2ஆம் கட்ட கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 11 ஆம் திகதியுடன் நிறைவடையும். முதலாம் தவணையின் 3 ஆம் கட்ட கல்வி நட வடிக் கைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகி, மே மாதம் 9 ஆம் திகதி வரை நடைபெறும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-8)

# உ/த பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை
## இலங்கை ஆசிரியர் சங்கம் கவலை

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் குறிப்பாக நகர்ப்புற தேசிய பாடசாலைகளில் க.பொ.த உயர்தர பாடத்திற்கான ஆசிரியர்களின் கடுமையான பற்றாக்குறை குறித்து இலங்கை ஆசிரியர் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

கல்வித்துறையில் சுமார் 30,000 ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பதாக தொடர்ந்து கூறப்பட்டு வந்தாலும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான எந்தவொரு உறுதியான திட்டத்தையும் செயற்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது என்று சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இது பல்கலைக்கழக நுழைவுக்குத் தயாராகும் ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்வித் தரத்தை அச்சுறுத்தும் "கடுமையான நெருக்கடி" என்றும் அவர் நிலைமையை விவரித்தார்.

இதற்கிடையில், இந்த ஆசிரியர் பற்றாக்குறையின் நேரடி விளைவாக முறைசாரா பயிற்சித் துறை வளர்ச்சியடைந்து வருவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார ஆராய்ச்சி பிரிவின் பேராசிரியர் வசந்த அதுகோரல சுட்டிக்காட்டினார்.

அத்துடன், வரவு-செலவுத் திட்டத்தையும் விமர்சித்த அவர், கல்வித் துறையில் நீண்டகாலமாக நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க அது தவறிவிட்டது என்றும் தெரிவித்தார். (நி-8)

# அமெரிக்கா- சீனா வர்த்தகப்போர்; இலங்கைக்கு பெரும் பாதிப்பு
## ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)

அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையே நடந்து வரும் வர்த்தகப் போரினால் இலங்கைக்கு கடுமையான பொருளாதார விளைவுகள் ஏற்படும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

அமெரிக்கா சமீபத்தில் விதித்த "பரஸ்பர" வரிகளையும் சீனாவின் பழிவாங்கும் நடவடிக்கைகளையும் எடுத்துரைத்து, ஒரு அறிக்கையை வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க, அதன் விளைவாக ஏற்படும் வர்த்தக பதற்றங்கள் தொழிற்சாலை மூடல்கள், பெரியளவிலான வேலை இழப்புகள் மற்றும் விரிவடையும் வர்த்தக பற்றாக்குறைகள் மூலம் இலங்கையின் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை கடுமையாக பாதிக்கக்கூடும் என்று எச்சரித்தார்.



தேசிய கட்டணக் கொள்கையை செயற்படுத்துதல், GSP+ சலுகைகள் குறித்து EU உடன் ஈடுபடுதல் மற்றும் இந்தியாவுடனான ECTA போன்ற வர்த்தக ஒப்பந்தங்களை விரைவாகக் கண்காணித்தல் உள்ளிட்ட உடனடி கொள்கை நடவடிக்கைகளையும் அவர் வலியுறுத்தினார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஜராத்தின் 'இளவரசன்' சாய் சுதர்சன்

## வெற்றி மேல் வெற்றி குவித்து கோலோச்சு
## எதிர்ப்பின்றி வீழ்ந்தது ராஜஸ்தான்




இந்தியன் பிரிமியர் லீக் போட்டியில் அசத்திய குஜராத் அணி, 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தானை வென்றது. சாய் சுதர்சன் அரைச்சதம் விளாசினார்.

குஜராத் மாநிலம் அஹமதாபாத்தில் நடந்த பிரிமியர் லீக் போட்டியில் குஜராத் - ராஜஸ்தான் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணித் தலைவர் சஞ்சு சாம்சன் பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

**சுதர்சன் அபாரம்:**

குஜராத் அணிக்கு அணித் தலைவர் சுப்மன் கில் (2) ஏமாற்றினார். பின் இணைந்த சாய் சுதர்சன், பட்லர் ஜோடி நம்பிக்கை தந்தது. துஷார் தேஷ்பாண்டே வீசிய 5வது ஓவரில் ஒரு சிக்சர், 2 பவுண்டரி விரட்டினார் சுதர்சன்.

மறுமுனையில் அசத்திய பட்லர் பரூக்கி, மகேஷ் தீக்ஷன ஓவரில் தலா 2 பவுண்டரிகள் அடித்தார். பொறுப்பாக ஆடிய சுதர்சன், 32 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். இரண்டாவது விக்கெட்டுக்காக 80 ஓட்டங்கள் சேர்த்தபோது தீக்ஷன பந்தில் பட்லர் (36) ஆட்டமிழந்தார்.

**ஷாருக்கான் நம்பிக்கை:**

பரூக்கி வீசிய 12வது ஓவரில் வரிசையாக 2 பவுண்டரி விரட்டிய ஷாருக்கான், தீக்ஷன வீசிய 14ஆவது ஓவரில் ஒரு சிக்சர், 2 பவுண்டரி விரட்டினார். மூன்றாவது விக்கெட்டுக்காக 62 ஓட்டங்கள் சேர்த்த போது தீக்ஷன "சுழலில்" ஷாருக்கான் (36) சிக்கினார்.

சுதர்சன் 82 ஓட்டங்களில் (3 சிக்சர், 8 பவுண்டரி) ஆட்டமிழந்தார். ரஷித் கான் (12) நிலைக்கவில்லை. சந்தீப்சர்மா வீசிய 20வது ஓவரில் அசத்திய ராகுல் தெவாட்டியா, ஒரு சிக்சர், 2 பவுண்டரி அடித்தார்.

குஜராத் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களை எடுத்தது. தெவாட்டியா (24) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**சாம்சன் ஆறுதல்:**

கடின இலக்கை விரட்டிய ராஜஸ்தான் அணிக்கு யஷஸ்வி ஜெய்ஸ்வால் (6), நிதிஷ் ராணா (1) ஏமாற்றினர். பின் இணைந்த அணித் தலைவர் சஞ்சு சாம்சன், ரியான் பராக் ஜோடி ஓரளவு கைகொடுத்தது. அர்ஷத் கான் வீசிய 4வது ஓவரில் ஒரு சிக்சர், 2 பவுண்டரி அடித்தார் சாம்சன். மொஹமட் சிராஜ், பிரசித் கிருஷ்ணா பந்தில் சிக்சர் விளாசினார் பராக். மூன்றாவது விக்கெட்டுக்காக 48 ஓட்டங்கள் சேர்த்தபோது கெஜ்ரோலியா பந்தில் பராக் (26) ஆட்டமிழந்தார்.

ரஷித் கான் "சுழலில்" துருவ் ஜூரெல் (5) சிக்கினார். அடுத்து வந்த ஹெட்மயர், ரஷித்கான் வீசிய அடுத்தடுத்த ஓவரில் தலா ஒரு சிக்சர் பறக்கவிட்டார்.

**ஹெட்மயர் அரைசதம்:**

பொறுப்பாக ஆடிய சாம்சன் 41 ஓட்டங்களில் (2 சிக்சர், 4 பவுண்டரி) ஆட்டமிழந்தார். அபாரமாக ஆடிய ஹெட்மயர், 29 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். பிரசித் கிருஷ்ணா வீசிய 16வது ஓவரில் ஜோப்ரா ஆர்ச்சர் (4), ஹெட்மயர் (52) அவுட்டாகினர். சாய் கிஷோர் "சுழலில்" தேஷ்பாண்டே (3), தீக்ஷன (3) சிக்கினர்.

19.2 ஓவர்களில் ராஜஸ்தான் அணி 159 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது. சந்தீப் சர்மா (6) ஆட்டமிழக்காமல் இருந்தார். (ம-4,7)

# படிதார் வெற்றி வழிகாட்டி

## கவாஸ்கர் பாராட்டு

பெங்களூரு அணி "ரிலாக்ஸ்" ரஜத் படிதர் தலைமையில் வெற்றிக்கான வழியை கண்டறிந்துள்ளது என கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் பெங்களூரு அணி இதுவரை நடந்த 17 சீசனில் ஒரு கிண்ணம் கூட வென்றதில்லை. 2009, 2011, 2016 என மூன்று முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறியதுதான் அதிகபட்சம். இம்முறை ரஜத் படிதர் தலைமையில் களமிறங்கி உள்ளது.

17 ஆண்டுக்குப் பின் சென்னையில் வென்றது. தொடர்ந்து 6 போட்டிகளுக்குப் பின் மும்பை வான்கடே மைதானத்தில் வெற்றி பெற்றது. இம்முறை முதல் 4 போட்டிகளில் 3இல் வென்றது.

இது குறித்து இந்தியக் கிரிக்கெட் ஜாம்பவான் கவாஸ்கர் கூறியதாவது,


ரஜத் படிதர் சிறந்த அணித் தலைவராகத் தெரிகிறார். 17 ஆண்டுகளாக எவ்வித கிண்ணத்தையும் வெல்லாத பெங்களூரு அணி, "ரிலாக்ஸாக" செயற்படும் அணித் தலைவருடன் அணியின் வெற்றிக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை இப்போது புரிந்து கொண்டனர். மற்றைய வீரர்களும் தங்கள் அனுபவத்தை பகிர்ந்து கொண்டு அணியின் வெற்றிக்கு உதவுகின்றனர்.

எப்போது கேட்டாலும் உதவும் மனப்பான்மையுடன் உள்ள தினேஷ் கார்த்திக் போன்ற சீனியர்கள், சக பணியாளர்கள் அணியில் உள்ளனர்.

இதில் தினேஷ் கார்த்திக் திறமை குறித்து யாரும் அதிகம் பேசுவது இல்லை. இளம் வீரர்களுடன் அதிக நேரம் செலவிடும் அவர், தேவையான "அட்வைஸ்" தருகிறார். இதுபோல வெற்றிக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் சகவீரர்கள், பணியாளர்களை பெற்றிருப்பது ரஜத் படிதரின் அதிர்ஷ்டம் தான். இவ்வாறு அவர் கூறினார்.

**அபராதம்**

மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த இந்தியன் பிரீமியர் லீக் போட்டியில் பெங்களூரு (221/5) அணி, 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பையை (209/9) வீழ்த்தியது. இப்போட்டியில் பெங்களூரு அணியினர் நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்குள் பந்துவீசவில்லை. இது முதன்முறை என்பதால் பெங்களூரு அணித் தலைவர் ரஜத் படிதருக்குப் போட்டி சம்பளத்தில் ரூ.12 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. (ம-4,7)




## பாரிய பொரு...

கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன் கிழமை (09) இடம்பெற்ற பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஏப்ரல் 9 ஆம் திகதிக்குள் நமது நாட்டிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 44 வீத பரஸ்பர வரி விதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்களை உலகமே அறிந்திருந்தும் நமது அரசு அறியாமல் இருப்பது ஆச்சரியத்துக்குரிய விடயமாகும். அமெரிக்காவை முதன்மையாக முன்னிறுத்துவதே ஜனாதிபதி ட்ரம்பின் தேர்தல் மேடைகளில்முக்கிய கருப்பொருளாக அமைந்து காணப்பட்டன. அந்த வாக்குறுதியின் பிரகாரம் இந்த வரிகளை விதித்துள்ளார்.

ஜனாதிபதி ட்ரம்ப் தனது கொள்கை அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டிருந்தார். நமது அரசாங்கமானது தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை மறந்தாலும் டொனால்ட் டிரம்ப் தனது விஞ்ஞாபனத்தை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளார்.

இந்த வரிகளினால் எமது நாட்டுக்குப் பாரிய பாதிப்புகள் ஏற்படும் என பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் தூதுக்குழுவை அனுப்பியுள்ளதாகப் பதிலளித்தனர்.

ஒரு நாடாக நாம் அமெரிக்கப் பிரதிநிதிகளை இராஜதந்திர ரீதியாக நேரடியாகச் சந்திக்க வேண்டும். ஜனாதிபதி ட்ரம்புக்குக் கடிதம் அனுப்பினால் மட்டும் போதாது. 44வீத தீர்வை வரி விதிப்பு நமது நாட்டின் ஏற்றுமதித் துறைக்கு விழுந்த பெரும் அடியாகும். சகல தொழிற்துறைக்கும் இது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும். இந்த வரிகளால் தொழில்கள் வீழ்ச்சியடையும். வேலைகள் இழக்கப்படும். வருமானம் குறையும். பொருளாதாரம் வீழ்ச்சியடையும். இதனால் 2028 இல் கடனைத் திருப்பிச் செலுத்துவது கூட கடினமாக மாறும்.

சர்வதேச நாணய நிதியம் 2033 ஆம் ஆண்டிலிருந்து கடனைத் திருப்பிச் செலுத்த முன்வந்த போதிலும் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் அவதானத்தைப் பெறுவதற்கு முந்தைய அரசாங்கம் 2028 இலிருந்து திருப்பிச் செலுத்தும் விதமாக கால அவகாசத்தைக் குறைத்தது. இதற்கு துரித பொருளாதார வளர்ச்சி விகிதம் காணப்பட வேண்டும்.

எனவே ஆடைத்துறை மற்றும் இதர ஏற்றுமதித் துறைகளுக்கு இந்தியா விதித்துள்ள கட்டுப்பாடுகளை நீக்குமாறு இந்தியப் பிரதமருடனான சந்திப்பின்போது நான் யோசனை முன் வைத்தேன். ஆளும்கட்சி, எதிர்க்கட்சி, இனம், மதம், சாதி, வர்க்கம், அந்தஸ்து என்ற வேறுபாடின்றி இதனை நாம் எதிர்கொள்ள வேண்டும்.

அதற்காக சகல கட்சிகளையும் கூட்டி பொதுவான வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டும். கடுமையான பொருளாதாரப் பேரழி ஏற்பட முன்னதாக நாம் ஒற்றுமையாகவும் பொதுவான ஒருமித்த நிலைப்பாட்டின் அடிப்படையிலும் செயற்பட வேண்டும் என்றார். (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சித் தலைவர்களுக்கான கூட்டம் ஜனாதிபதி அநுர அழைப்பு

(கொழும்பு)


ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இன்று கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்கா விதித்துள்ள புதிய வரித்திருத்தத்தினால் எழுந்துள்ள சிக்கல்களைத் தீர்க்கக்கூடிய வழிமுறைகள் மற்றும் அரசாங்கம் என்ற அடிப்படையில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் போன்றவை குறித்து கலந்துரையாடப்பட வுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

அதன்படி, இந்தக் கூட்டம் இன்று காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தனது X தளத்தில் இதை தெரிவித்துள்ளார்

12 எதிர்க்கட்சித் தலைவர் கள் இந்த விடயம் குறித்து கலந் துரையாடுவதற்காக ஜனா திபதியைச் சந்திக்க அனுமதி கோரியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை அமெரிக் காவின் புதிய தீர்வை வரி யினால் ஏற்பட்டுள்ள தாக்கம் மற்றும் ஏனைய விளக்கங்கள் அடங்கிய கடிதம் ஒன்றை,



ஜனாதிபதி அநுரகுமார திசா நாயக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு அனுப்பி வைத்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (நி-8)

# ஊழல் ஒழிப்பு நிறுவனங்கள் மீதான நம்பிக்கையில் வீழ்ச்சி

## ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக நிறுவப்பட்டுள்ள நிறுவனங் கள் தொடர்பாக மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந் துள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித் துள்ளார்.

ஊழல் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டம் நேற்று பண் டாரநாயக்க ஞாபகார்த்த மாநா ட்டு மண்டபத்தில் நடைபெற் றது.

இதில் உரையாற்றிய ஜனா திபதி, பிரதம நீதியரசர், சட்ட மா அதிபர், பொலிஸ் மா அதிபர் மற்றும் அமைச்சுகளின் செய லாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் ஒன்றாக இணைந்து செயற் பட்டால் மக்களின் நம்பிக்கையை வெல்ல முடியும்.

மக்களுக்கு மாபெரும் எதிர் பார்ப்புகள் இருக்கின்றன.

அவற்றில் முதன்மையானது ஊழல்கள் ஒழிக்கப்பட வேண் டும் என்பதே.

மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படும் போது, அவர்கள் மத்தியில் நம்பிக்கை கட்டியெழுப்பப்படுகிறது என ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க இதன்போது தெரிவித் துள்ளார். (நி-8)

## அரச ஊழியர்களுக்கான

# அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை இன்று வழங்குமாறு அறிவிப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கான அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை இன்று வழங்குமாறு அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலை வர்களுக்கு பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள் ளூராட்சி அமைச்சு அறிவித் துள்ளது.

சுற்றறிக்கையினூடாக இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள் ளது.

ஏதேனுமொரு காரணத்தி னால் அதிகரிக்கப்பட்ட சம்பளத் தொகையை அன்றைய தினத் திற்குள் வழங்க முடியாவிடின் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டும் என அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக பண்டார தெரி வித்துள்ளார். (நி-8)

# நாடு திரும்பும் பசில் ராஜபக்ஷ



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங் களுக்கான தேர்தலைத் தொட ர்ந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் மாற்றங்களை செய்தவதற்காக அந்தக் கட்சியின் நிறுவனர் பசில் ராஜபக்ச இலங்கை திரும்பவுள்ளார்,

பசில் ராஜபக்ச ஜூன் மாதம் நாடு திரும்புவார் எனக் கட்சி வட்டாரங் களை மேற்கோள் காட்டி தகவல் வெளியாகி உள் ளது.

அவரின் வருகையை அடுத்து சிறீலங்கா பொது ஜன பெரமுனவின் நிலைப்பாடுகளில் பல குறிப்பிடத்தக்க மாற் றங்கள் இடம்பெறும்.

இவை நாமல் ராஜபக்ச வின் எதிர்கால அரசியல் திசையை தீர்மானிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின் றது.

நாடு திரும்பும் பசில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக் காகக் கொண்டு கட்சியின் உறுப் பினர்களை ஒன்றிணைத்தல் வெளியேறியோர் அல்லது கட்சி செயற்பாட்டில் ஒதுங்கியி ருப்போரை மீண்டும் இணை த்தல் உள்ளிட்ட விடயங்களை கையாள்வார் என்றும் கூறப் படுகிறது. (நி-8)

# சிறுவர் துஷ்பிரயோக வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளின் விசா ரணைகளை துரிதப்படுத்துவ தற்கான திட்டத்தை தயாரிப் பதற்கு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தீர்மானித் துள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சுமார் 40,000 வழக்குகள் நிலுவையில் உள் ளமை வெளிக்கொணரப்பட்டுள் ளதாக அமைச்சு தெரிவித் துள்ளது.

பல ஆண்டுகளாக சில வழக் குகளுக்கான தீர்ப்பு வழங்கப் படும் செயற்பாடுகள் தாமதமாகி வருவதால் சிக்கல் நிறைந்த சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக வும் அமைச்சு சுட்டிக்காட்டியுள் ளது.

இந்த விடயம் தொடர்பில் நீதி அமைச்சுடன் பலகட்ட கலந்து ரையாடல்கள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளில் பாதி க்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்வத ற்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது உடனடியாக குற்றச்சாட்டு கள் பதிவு செய்யப்பட வேண் டும் என தெரிவிக்கப்பட்டுள் ளது.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதை விரைவுபடுத்த சட் டமா அதிபர் திணைக்களத்தின் உதவியைப் பெறுவதற்கான திட்டங்களும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. (நி-8)

# இராசிபலன்

10.04.2025
பங்குனி 27, வியாழக்கிழமை
திரயோதசி பின்னிரவு 2.21 மணிவரை

பூசம் பிற்பகல் 2.00 மணிவரை
சுபநேரம் 7.36-9.06 மணிவரை
இராகுகாலம் 1.36-3.06 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்-
திருவோணம், அவிட்டம்

வளவன்




பிறருக்கு உதவும் எண் ணம் உருவாகும், எதிர் கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.




வார்த்தைகளில் நிதானம் தேவை, கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உரு வாகும், இயல்பான வாழ்க்கையில் இன்ப ங்கள் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் மந்தம் ஏற்படலாம்.




பொழுது போக்கு விட யங்களில் ஆர்வம் காட் டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.




கௌரவம் மிக்கவர் களின் சந்திப்புகள் இடம்பெறலாம், ஆன் மீக சிந்தனை மேலோங்கும் நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.




உறவினர்களும் நண்பர் களும் வலிய வந்து உதவுவார்கள், செய் தொழில் மேன்மை யுண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் சுப நிகழ் வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, தொழில் வாய்ப்புக்கள் தேடி வர லாம், கல்யானக்கனவுகள் நனவாக லாம், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.




பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும், செய்தொழிலில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், உற்சாகமான நாள்.




தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெற லாம், வீட்டுத் தேவை களை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.




வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி தரும்.




உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், பொதுவாழ்வில் கௌர வமான சம்பவங்கள் இடம்பெறலாம், நல்லவர்களின் தொடர் புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

பகலுக்கு கண்கள் உண்டு, இரவுக்கு செவிகள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு வெளிக்கள நிறுவனத்தால் நடத்தப்பட்ட மாணவர்கள் கௌரவிப்பு





(யாழ்ப்பாணம்)

2022,2023 ஆண்டு களுக்குரிய க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வட மாகாணத் தின் ஐந்து மாவட்டங்களிலும் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று திறமைச் சித்தியடைந்த மாணவர் களிற்கான கௌரவிப்பு நிகழ்வு தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு நிறுவ னத்தால் கடந்த 06.04.2025 அன்று நடத்தப்பட்டது.

இதன்போது ஐந்து மாவட் டங்களில் இருந்தும் பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், கலை, வர்த் தகம், பொறியியல் தொழில் நுட்பம், உயிர்முறையியல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் முதல் நிலை பெற்ற அறுபது மாணவர் களுக்கான பரிசில்களை இந் நிகழ்வில் பிரதம விருந்தி னராகக் கலந்து கொண்ட இளைப்பாறிய வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதய குமார் வழங்கி வைத்ததுடன் இந் நிலைய வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும் வழங் கினார்.

இந் நிகழ்வில் இந் நிலை யத்தின் நிபுணத்துவ ஆலோ சகர்களான இளைப்பாறிய வலயக் கல்விப் பணிப்பாளர், யோ.ரவீந்திரன், தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப் பாளர் பி.என்.சுதர்சன் ஆகி யோர் கலந்து சிறப்பித்தனர்.

ஏற்புரை வழங்கிய மாணவர்கள், பெற்றோர்கள் தமது உரையில் இந் நிலையம் நடத்திய பரீட்சைகள் சிறப்பு பெறுபேறுகளை பெறுவதற்கு பேருதவியாக அமைந்ததாக தெரிவித்தனர். (6-8)

# சட்டவிரோத மணல் ஏற்றி சென்ற டிப்பர் தடம்புரள்வு




(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறை யில் மணல் ஏற்றி சென்ற டிப்பர் வாகனத்தை பொலிஸார் துரத்தி சென்ற போது, வாக னம் தடம்புரண்டு விபத்துக் குள்ளான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

யாழ். நகர் பகுதியை நோக்கி நேற்று புதன்கிழமை அதிகாலை மணல் ஏற்றிக் கொண்டு பயணித்த டிப்பர் வாக னத்தை பொலிஸார் வழி மறித்த போது, நிறுத்தாமல் டிப்பர் வாகனத்தை சாரதி மிக வேகமாக பயணிக்க குறித்த வாகனத்தை பொலிஸார் துரத்திச் சென்றனர்.

அவ்வேளை வாகனம் நல்லூர் பின் வீதி வழியூடாக சென்று வீதி வளைவில் திரும்ப முற்பட்ட வேளை வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீடொன்றின் மதிலை உடைத்து , வீதியில் தடம் புரண்டு விபத்துக்கு உள்ளா னது.

எனினும் இவ் விபத்தில் எவருக்கும் காயம் ஏற்பட வில்லை மேலும் விபத்துக்கு உள்ளான வாகனத்தின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ள நிலையில் , மேல திக விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர். (6-8-33)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உலக சுகாதார நாளை சிறப்பிக்கும் ஒன்று கூடல் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பொது மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜா அமெரிக்க சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை பேராசிரியர் தவம் தம்பிப்பிள்ளை ஆகியோர் அதிதியாக கலந்து கொண்டனர். (படம்-சிவசாந்தன்)



சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும் கரவெட்டி பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய புதுவருட கண்காட்சியும் விற்பனை சந்தையும் நேற்று புதன்கிழமை கரவெட்டி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.கரவெட்டி பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் இராயப்பு அன்ரனி தலைமையில் நடைபெற்றது. (படம்-மகாலிங்கம்)

# 'வெள்ளியில் ஞாயிறு' இன்று ஆரம்பம்




(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத் தின் ஆற்றுகையான திருப் பாடுகளின் நாடகம் இவ் வாண்டு "வெள்ளியில் ஞாயிறு" என்னும் பெயரில் இன்று வியா ழக்கிழமை முதல் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பா ணத்தில் அமைந்துள்ள திரு மறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

"வெள்ளியில் ஞாயிறு" திருப்பாடு களின் நாடகம் முதன் முதலாக 2010 ஆம் ஆண்டி லும் அதனைத் தொடர்ந்து 2018 ஆண்டிலும் மேடையேற் றப்பட்டது. தற்போது மூன்றா வது தடவையாக மேடையேற் றப்படுகின்றது.

திருமறைக் கலாமன்றத் தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமாரின் எழுத்துரு, நெறியாள்கையில் தயாராகும் "வெள்ளியில் ஞாயிறு" துயரமும் சிலுவை களும் இல்லாது வெற்றியும் மகிழ்ச்சியும் இல்லை. நல்லன வற்றுக்கான மானிடத்தின் துய ரங்களும் பிரயத்தனங்களும் தான் வெற்றியைத் தருகின் றன என்ற கருப்பொருளினை மையமாகக் கொண்டுள்ளது.

வழமை போலவே பிரமா ண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும், அரங்கப் பின்ன ணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களின் பங்கேற்புடன் அரங்கேறத் தயாராகின்றது வெள்ளியில் ஞாயிறு. (நி-8)



மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மஹாவல்லி கஜவல்லி சமேத ஸ்ரீ கந்தசுவாமியரது மஹா கும்பாபிஷேக பெருவிழாவை முன்னிட்டு எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான நிலையில் பல பக்தர்கள் கலந்து கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விசுவாவசு' வருஷ வருஷப்பிறப்புக் கருமங்கள்

**வாக்கிய பஞ்சாங்கம்**

நிகழும் குரோதி வருஷம் பங்குனி மாதம் 30 ஆம் திகதி (14.04.2025) ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு 2.29 மணிக்கு, அபர பக்க பிரதமை திதியில் சுவாதி நட்சத்திர முதலாம் பாதத்தில், வச்சிரம் நாமயோகத்தில், கவுலவக் கரணத்தில், மகர லக்கினத்தில், கன்னி நவாம்சத்தில், செவ்வாய் காலவோரையில், புதன் சூக்கும வோரையில், சாத்விக குண வேளையில் நட்சத்திர பட்சியாகிய காகம் துயில் தொழிலும் சூக்கும பட்சி நடைத் தொழிலும் செய்யும் காலத்தில் இப் புதிய விசுவாவசு வருஷம் பிறக்கின்றது.அன்று முன்னிரவு 10.29 மணி முதல் மறு நாள் காலை 6.29 மணி வரை விஷு புண்ணிய காலமாகும்.

இப் புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்து நீர் தேய்த்து சிரசில் எண்ணெயையும். காலில் இலவமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து சிவப்பு, நீல நிறமான பட்டா டையாயினும், இந் நிறக்கரையமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து நீலக் கல் மாணிக்கம் முதலியவற்றாலான ஆபரணம் அணிந்து, சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி, விக்கினேஸ்வரர் முதலிய குலதெய்வ வழிபாடு செய்து, இயன்ற தான தருமங்களியற்றி, குரு, பெற்றவர் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று.உற்றார், உறவினர்களுடன் அளவளாவி, அறுசுவை உண வுடன் சுக்கு, திற்பிலி, மிளகு, அப்பம் என்பவை சேர்த்தருந்தி, தாம்பூலம் தரித்து, கண்ணாடியில் முகதரிசனம் செய்து புதிய வருஷப் பலன்களை வாசித்தும், கேட்டும் நன்குணர்ந்து தத்தம் சமய நூல்களைப் பாராயணம் செய்து மங்களகரமாக சயனஞ்செய்க.

மறுநாளாகிய விசுவாவசு வருஷம் சித்திரை மாதம் முதலாம் திகதி (14.04.2025) திங்கட்கிழமை வைகறையில் துயிலெழுந்து மனத்தூய்மையுடன் வழிபடும் கடவுளைத் தியானித்து தாம் முன்செய்தவைகளையும், மேற் செயற்பாலனவாகிய அறம்,பொருள் இன்பங்களையும் சிந்தித்து கண்ணாடி தீபம் , நிறைகுடம் தன் வலக்கை, தாய் தந்தை ,குரு முதலியோர் பாதம் பணிந்து தேவதைகளின் திருவுருவம், திருமுறைப் புத்தகம், தாமரை முதலிய பூக்கள், பழவகை, மஞ்சள், குங்குமம், சந்தனம், வெற்றிலை பாக்கு முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து தங்கள் வீடுகளிலே சூரியனுக்குப் பொங்கல், பூஜை வழிபாடு செய்து தான தருமங்களியற்றி மங்கலகரமாக வாழக்கடவர்.

சங்கிரம தோச நட்சத்திரங்கள் திருவாதிரை, சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3, சதயம் , பூரட்டாதி 4 , உத்தரட்டாதி. ரேவதி இந்த நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்து வழிபாடாற்றி தான தருமம்செய்தல்வேண்டும்.

**திருக்கணித பஞ்சாங்கம்**

குரோதி வருஷம் பங்குனி மாதம் 30 ஆம் நாள் (14.04.2025) ஞாயிற்றுக் கிழமை பின்னிரவு 3.21 மணிக்கு விசுவாவிசு எண்ணும் பெயருடைய தமிழ் புது வருடம் உதயமாகின்றது.

இது 60 வருட சுற்றுவட்டத்தில் 39 ஆவது வருஷமாகும். அந்நேரம் நட்சத்திரம் சுவாதி, முதலாம் பாதம், திதி- அபர பட்ச பிரதமை, ஞாயிற்றுக்கிழமை இரவு 11.21 மணி முதல் திங்கள் காலை 7.21 மணிவரை மேட சங்கிரமான புண்ணிய காலமாகும், வருஷம் பிறக்கும் போது உதய லக்கினம் கும்பம் ஆகும்.

**மருத்து நீர்**

தாழம்பூ, தாது மாதுளம் பூ, தாமரைப் பூ, துளசி, வில்வம், அறுகு, பால், கோமயம், கோசலம், கோரோசனை, குங்குமப் பூ, பச்சைக் கற்பூரம், மஞ்சள், சுக்கு, திற்பிலி. ஆகியவற்றை சுத்த ஜலத்தில் இட்டுக் காய்ச்சிய கஷாயமாகும். பூவகை கிடைக்காவிடின் அவைகளின் இலை, பட்டை, வேர், கிழங்கு யாதாயினும் உபயோகிக்கலாம்.

**புதிய வருஷ கைவிஷேசம்- வாக்கிய பஞ்சாங்கம்**

14.04.2025- சித்திரை 01- திங்கள்- முற்பகல் 9.09-9.56 மணிவரை
14.04.2025- சித்திரை 01- திங்கள்- முற்பகல் 9.59-10.31 மணிவரை
14.04.2025- சித்திரை 01- திங்கள்- பிற்பகல் 4.06-5.00 மணிவரை
16.04.2025- சித்திரை 03- புதன்- முற்பகல் 9.04-9.48 மணிவரை
16.04.2025- சித்திரை 03- புதன்- முற்பகல் 9.52-11.46 மணிவரை

**புது வருஷ கைவிஷேசம்- திருக்கணித பஞ்சாங்கம்**

14.04.2025- சித்திரை 01- திங்கள்- காலை 6.05-7.10 மணிவரை
14.04.2025- சித்திரை 01- திங்கள்- காலை 9.05-9.55 மணிவரை
16.04.2025- சித்திரை 03- புதன்- காலை 9.05-9.48 மணிவரை
16.04.2025- சித்திரை 03- புதன்- முற்பகல் 9.00-11.15 மணிவரை


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1995 - இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>8இல் செவ்<br>கி.பா :58<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில் : A/L, Driver (Canada)<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/15305 | பிறப்பு-1994 - இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>3 இல் சூரி செவ்<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15310 |
| பிறப்பு: 1985 - இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா-37 1/2<br>உயரம் : 5'8"<br>தகைமை/தொழில்:<br>BSc,BEd,MEd,Science Teacher<br>எதிர்பார்ப்பு - உத்தியோகம்<br>தொ.இ: B/15306 | பிறப்பு -1996 - இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>6 இல் சூரி செவ்<br>கி.பா: 10<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்-BSc,Business Analyst(pvt)<br>எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15313 |
| பிறப்பு:1991 - இந்து<br>நட்சத்திரம் : சுவாதி<br>கி.பா-25 1/2<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்: A/L,London<br>எதிர்பார்ப் பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15308 | பிறப்பு-2000 - NRC<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்:<br>Management,HRM,HNDA<br>எதிர்பார்ப்பு-வெளிநாடு<br>தொ.இ: G/15314 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



# சேவை நலன் பாராட்டும்




60 ஆவது அகவை தின வாழ்த்தும்

**திரு.கந்தையா சுபேந்திரன்**
(அலுவலக உதவியாளர்-விசேட தரம்)
01.01.1995-09.04.2025

சேவை விபரம்
- திரு/செல்வநாயகபுரம் மகா வித்தியாலயம்
- திரு/சென் சேவியர் மகா வித்தியாலயம்
- திரு/விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்
- யா/சென் சாள்ஸ் மகா வித்தியாலயம்
- யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்
- யா/வண்ணை நாவலர் வித்தியாலயம்
- யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்
- யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

நகைச்சுவை ததும்பு மொழி பேசி
பாட்டுத் திறத்தாலே மனங்களைவென்று
உடலும் உளமும் ஒன்றாக்கி நல்கிய பணியை
நன்நாளில் போற்றுகின்றோம்.

(3907)

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்





திரு.சிங்கராஜா துமிசன்
(M.Ed) 1st class

திரு.தெட்சிணாமூர்த்தி மகிதரன்
உயர் உடற்கல்வி டிப்ளோமா (Merit)

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற எமது பாடசாலையின் ஆசிரியரையும், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளரையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

(3896)

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/இணுவில் இந்துக்கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் சட்டவிரோத மீன்பிடி வள்ளங்கள் எரியூட்டல்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சட்ட விரோத தொழில் நடவடிக் கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட 20 வள்ளங்கள் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நேற்று முன்தினம் எரியூட்டப் பட்டுள்ளன.

கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களம் மற்றும் மீனவ அமைப்புகள் விசேட அதிரடிப்படை கடற்படை என அனைத்து தரப்பினரும் இணைந்து பல்வேறு சுற்றி வளைப்புகளையும் சட்ட விரோத தொழில் நடவடிக்கை களை கட்டுப்படுத்த கைது நடவடிக்கைகளையும் மேற் கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் உள்நாட்டு நிர்மாண விதிகளுக்கு முர ணாக தயாரிக்கப்பட்டு நந்திக் கடல் களப்பில் சட்டவிரோத தொழில்களுக்கு பயன்படு த்தப்பட்ட 20 வள்ளங்கள் மீட் கப்பட்டு முல்லைத்தீவு நீதி மன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் நந்திக்கடல் களப்பை அண் மித்த பகுதியில் எரியூட்டப்பட் டன. (6-8)



# சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட 9 பேர் படகுகளுடன் கைது

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு கடற்பரப் பில் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட ஒன்பது நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் இருபடகுகளும் கைப்பற் றப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட 8.5 கண் குறுக் கிட்டு வலையுடைய படகு ஒன்றும், மீன் ஏற்றும் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டிருந் தது.

அத்தோடு ஒன்பது சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களை முல்லைத்தீவு நீதி மன்றில் முற்படுத்த முல் லைத்தீவு மாவட்ட நீர்வள திணைக்களத்தின் உதவி பணிப்பாளர் மோகனகுமார் நடவடிக்கைகளை முன்னெ டுத்துள்ளார். (6-8-299)

# 16.5 லீற்றர் கசிப்புடன் அறுவர் பொலிஸாரால் கைது



(நெளுக்குளம்)

விசுவமடு மாணிக்கபுரம் பகுதியில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை சுற்றிவளைப் பில் சட்டவிரோதமாக தயா ரிக்கப்பட்ட 16.5 லீற்றர் கசிப்பு புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைப்பற் றப்பட்டுள்ளதுடன் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

கைது செய்யப்பட்ட சந் தேக நபர்கள் புதுக் குடியிருப்பு பொலிஸா ரின் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலி ஸார் மேலும் தெரிவித் தனர். (6-8-299)

# தேர்தல் விதி மீறல் தொடர்பில் வவுனியாவில் 6 முறைப்பாடுகள்

(குருமன்காடு)

தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பில் இதுவரை 6 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக வவுனியா மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் சி.அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூ ராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வவுனியாவில் கிடைக்கப் பெற்ற முறைப் பாடுகள் தொடர்பில் நேற்று கேட்ட போதே இவ்வாறு தெரி வித்தார்.

மேலும் தெரிவிக்கையில், வவுனியா மாவட்டத்தில் உள் ளூராட்சி மன்றத் தேர்தலுக் கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதுவரை எந்தவித குழப் பங்களும் இன்றி அமைதி யான முறையில் தேர்தல் செயற்பாடுகள் இடம்பெற்றுள் ளன.

இதுவரைக்கும் 6 முறைப் பாடுகள் கிடைக்கப் பெற்றுள் ளன. ஆறும் சிறிய முறைப் பாடுகள்.

தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பானது. தேர்தல் வன்முறை தொடர்பில் எவை யும் பதிவாகவில்லை.

அதில் 4 முறைப்பாடுகள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது. இரு முறைப்பாடு தொடர்பில் விசா ரணைகள் இடம்பெற்று வரு கின்றன எனத் தெரிவித் தார். (6-8-250)

# கலைமுகம் இதழ் வெளி வந்து விட்டது




(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத் தால் வெளியிடப்படும் "கலை முகம்" கலை இலக்கிய சமூக இதழின் 79 ஆவது இதழ் வெளி வந்துள்ளது.

வழமைபோல் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், நூல் மதிப்பீடுகள், பத்தி உட்பட பல்வேறு விடயங்களையும் தாங்கி இந்த இதழ் வெளி வந்துள்ளது. (6-8)

# தேசிய ஊழல் எதிர்ப்பு செயற்றிட்டம் கிளிநொச்சியில்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செய லகத்தில் இலஞ்சம் மற்றும் ஊழல் சார்த்துதல்களை புல னாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உள்ளக பிரிவுக்கான அலுவலகம் நேற்று கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி), நளாயினி இன்பராஜ் இனால் திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தின் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட அடுத்த 5 ஆண்டுக்கான (2025-2029) தேசிய ஊழல் எதிர்ப்பு செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் கொழும்பு பண் டார நாயக்க சர்வதேச மாநாட்டு ஜாஸ்மின் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

குறித்த செயற்றிட்டத்திற்கு அமைவாக மாவட்டச் செயல கங்களில் இலஞ்சம் மற்றும் ஊழல் சார்த்துதல்களை புல னாய்வு செயற்வதற்கான ஆணைக்குழுவின் உள்ளக பிரிவுக்கான அலுவலகம் திறந்து வைக்கும் நிகழ் வின் ஓர் அங்கமாக கிளி நொச்சி மாவட்டச் செயலகத் திலும் குறித்த அலுவலகம் திறந்து வைக்கப்படவுள் ளது. (6-8-33-316)

# நீர்வேலி கந்தசுவாமி ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் (2025) எதிர் வரும் 24 ஆம் திகதி வியா ழக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகவுள்ளது.

தொடர்ந்து மஹோற்சவங் கள் இடம்பெற்று எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி சனிக் கிழமை சப்பறத் திருவிழா வும், 11 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 9.30 மணி க்கு இரதோற்சவமும், 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும் என ஆலய பரி பாலன சபையினர் தெரிவித் துள்ளனர். (6-8)



வலிகாம வலய மட்ட மேசைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியின் 20 வயதுப் பிரிவினர் முதலாம் இடத்தையும் 16 வயதுப் பிரிவினர் இரண்டாம் இடத்தையும் 18 வயதுப் பிரிவினர் மூன்றாம் இடத்தையும் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# அமெரிக்கா - சீனா வர்த்தகப் போர் உச்சம்!



(பீஜிங்)

**"இது வெறும் மிரட்டல், அமெரிக்க வரி விதிப்பை எதிர்த்து சீனா இறுதிவரை போராடும்" என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் எச்சரிக்கைக்கு சீனா பதிலளித்துள்ளது.**

ஜனாதிபதியாக பொறுப்பேற்றது முதல், அமெரிக்காவுக்கு முன்னுரிமை என்ற கொள்கையுடன் செயற்பட்டு வரும் ட்ரம்ப், வர்த்தக ரீதியாக அமெரிக்காவால் பல நாடுகள் ஆதாயம் அடைந்து வருவதாகவும், அதே அளவு பலன் அவர்களால் தங்கள் நாட்டிற்கு கிடைக்கவில்லை என்றும் கூறி வந்தார்.

இதையடுத்து சீனா, கனடா, மெக்சிக்கோ உள்ளிட்ட நாடுகளில் அதிக வரி விதிப்பையும் மேற்கொண்டார். மேலும், பிற நாடுகள் தங்களுக்கு எந்த விகிதத்தில் வரி விதிக்கின்றனவோ, அதே விகிதத்தில் அந்த நாடுகளின் பொருட்கள் மீதும் பரஸ்பர வரி விதிக்கப் போவதாகவும் எச்சரித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து, சமீபத்தில் (ஏப்.4) உலக நாடுகளுக்கு பரஸ்பர வரி விதிக்கும் முடிவை அமுல்படுத்தினார். அதில், பிறநாடுகள் தங்கள் பொருட்கள் மீது விதிக்கும் வரி விகிதத்தை சற்றே குறைத்து, 'தள்ளுபடி' வரி விகிதங்களை ட்ரம்ப் வெளியிட்டார். அந்த வகையில் சீனாவுக்கு 34 சதவீதம் வரி விதித்து ட்ரம்ப் அதிரடி நடவடிக்கை எடுத்தார்.

இதன்மூலம், ட்ரம்ப் பின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் மட்டும் சீனப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள கூடுதல் வரி விகிதம் 54 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதேநேரத்தில், அமெரிக்கா விதித்த பரஸ்பர வரிகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், சீனாவும் பதிலுக்கு வரி விதித்துள்ளது. இதற்கிடையே, ட்ரம்பின் பரஸ்பர வரி விதிப்புக்கு எதிர்வினையாக பொதுமக்கள் பயன்பாட்டுக்கு மட்டுமின்றி இராணுவப் பயன்பாட்டிலும் ஈடுபடுத்தக்கூடிய பொருட்களை அமெரிக்காவின் 16 நிறுவனங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கு சீன வார்த்தகத் துறை அமைச்சகம் தடைவிதித்துள்ளது. இதன்மூலம், உலகின் இரு பெரும் பொருளாதார சக்திகளான அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தகப் போர் பதற்றம் புதிய உச்சத்தை அடைந்துள்ளது.

இந்த நிலையில், "தங்களுக்கு விதித்த பதில் வரியை சீனா திரும்பப்பெறாவிட்டால் அதற்கு கூடுதலாக 50% வரி விதிக்கப்படும்" என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர், "தங்களுடனான வணிகத்தில் சீனா ஏற்கனவே பல தில்லுமுல்லுகளைச் செய்து வருகிறது. 34% வரியை சீனா இன்றைக்குள் திரும்பப் பெறாவிட்டால், மேலும் 50% வரி விதிக்கப்படும். மேலும், சீனாவுடனான வரி தொடர்பான சமரச பேச்சுகள் அனைத்தையும் கைவிட்டுவிடுவேன்" என ட்ரம்ப் தன் ட்ரூத் சமூக தளத்தில் எச்சரித்துள்ளார். ஒருவேளை, ட்ரம்ப் இதைச் செய்யும் பட்சத்தில் சீனப் பொருட்களுக்கு அமெரிக்கா விதிக்கும் வரியின் மொத்த மதிப்பு 104% ஆக அதிகரிக்கும் நிலை ஏற்படும்.

"இது வெறும் மிரட்டல், அமெரிக்க வரிவிதிப்பை எதிர்த்து சீனா இறுதிவரை போராடும்" என ஜனாதிபதி ட்ரம்பின் எச்சரிக்கைக்கு சீனா பதிலளித்துள்ளது. இதுகுறித்து சீன வர்த்தக அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "சீனாவிற்கு எதிரான வரிகளை அதிகரிப்பதாக அமெரிக்கா அச்சுறுத்துவது என்பது தவறுக்கு மேல் தவறு செய்து வருகிறது. இது அமெரிக்காவின் மிரட்டலை மீண்டும் அம்பலப்படுத்துகிறது. அமெரிக்கா தனது விருப்பப்படி நடக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தால், சீனாவும் இறுதிவரை போராடும். அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த சீனா முயல்கிறது. வர்த்தகப்போரில்வெற்றியாளர்கள் யாரும் இல்லை" எனஅமைச் சகம் அதில் தெரிவித்துள்ளது.

முன்னதாக, "2017 ஆம் ஆண்டு அமெரிக்கா (முதல்) வர்த்தகப் போரை ஆரம்பித்ததிலிருந்து - அமெரிக்கா எவ்வாறு போராடினாலும் அல்லது அழுத்தம் கொடுத்தாலும் - நாங்கள் தொடர்ந்து வளர்ச்சியடைந்து முன்னேறி வருகிறோம், மீள் தன்மையை வெளிப்படுத்துகிறோம் - எவ்வளவு அழுத்தம் பெறுகிறோமோ, அவ்வளவு வலிமையானவர்களாக மாறுகிறோம். அமெரிக்க வரிகள் (சீனாவில்) தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால் "வானம் இடிந்து விழாது" என்று ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சி, தன்னுடைய பீப்பிள்ஸ் டெய்லி விளக்கவுரையில் குறிப்பிட்டுள்ளது. (நி-8)

## கூரை சரிந்து விழுந்து

✣ 66 பேர் உயிரிழப்பு

✣ 160 பேர் காயம்

✣ டொமினிகனில் சோகம்



கரீபியன் தீவு நாடான டொமினிகனில் இரவு நேர கேளிக்கை விடுதி ஒன்றின் மேற்கூரை சரிந்து விழுந்த விபத்தில் 66 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மேலும் இந்த விபத்தில் 160இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

விபத்து நடந்த இரவு நேரக் கேளிக்கை விடுதியில் விளையாட்டு வீரர்கள், அரசியல்வாதிகள் உட்பட சில புகழ் பெற்ற நபர்களும் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது.

## கொங்கோவில் கனமழை 33 பேர் உயிரிழப்பு



(கின்ஷாசா)

கொங்கோவில் பெய்து வரும் கன மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 33பேர் உயிரிழந்துள்ளனர். மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ குடியரசின் தலைநகர் கின்ஷாசாவில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

இக் கனமழை காரணமாக பல ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக அந்நாட்டில் 13 மாவட்டங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளதாகவும், இதனால் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வெள்ளப் பெருக்கினால் இதுவரை 33 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கன மழை, வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்க தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர், இராணுவத்தினர் களமிறக்கப்பட்டு மீட்பு பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை குறித்த பகுதிகளில் கனமழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித பாவனைக்கு உதவாத இறைச்சி எரியூட்டி அழிப்பு

## உடையார்கட்டில் சம்பவம்



(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு உடையார்கட்டு பகுதியில் பாவனைக்கு உதவாத 30 கிலோகிராம் மாட்டு இறைச்சி பொதுச் சுகாதார பரிசோதகர்களால் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட உடையார்கட்டு பகுதியிலுள்ள சந்தையில் திடீரென நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் பாவனைக்கு உதவாத வகையில் இருந்த மாட்டு இறைச்சி பொது சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டு, கடுமையான எச்சரிக்கை விடுக் கப்பட்டதுடன் உரிமையாளரின் அனுமதியுடன் எரித்து அழிக்கப்பட்டது.

குறித்த சோதனை நடவடிக்கையில் விசுவமடு சுகாதார பரிசோதகர் சந்திரமோகன், வள்ளிபுனம் பொது சுகாதார பரிசோதகர் றொஜிஷ்ரன் , கோம்பாவில் பொது சுகாதார பரிசோதகர் சுரேஸ் ஆனந்தன், புதுக்குடியிருப்பு பொது சுகாதார பரிசோதகர் கோகுலன் ஆகியோரும் குறித்த நடவடிக்கையை மேற்கொண் டிருந்தனர். (6-8-299)




# பச்சிலைப்பள்ளி பிரதேசசபை-பளை

**பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2025**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 10.04.2025 தொடக்கம் 23.04.2025 பிற்பகல் 2 மணிவரை (அலுவலக நேரம் )

கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 24.04.2025 பிற்பகல் 3.00 மணி

கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 24.04.2025 பிற்பகல் 3.00 மணி

கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை. தலைமை அலுவலகம்

**பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளுக்கான கேள்வி அட்டவணை.**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| மேற்தரை | | | | |
| 1. | PMS-08 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |

**நியந்தனைகள்:-**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் கிளிநொச்சி மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்).
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிரந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 24.04.2025 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் பல கடைகளுக்கு விண்ணப்பிக்குமிடத்து சபைக்கு நட்டம் ஏற்படாதவாறு மிகபொருத்தமானது என கருதும் சித்திரகுத்தகைதாரருக்கு. ஒருவருக்கு (இங்கு ஒருவர் என்பது ஒரு குடும்பத்தைக் குறிக்கும்) ஒருகடை மாத்திரமே சபையினால் வழங்கப்படும் என்பதுடன் ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. நீண்டகால குத்தகைக் கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும்.
06. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உபவாடகைக்குக் கொடுக்கவோ. உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
07. குறித்த கடைகளில் சகிக்கமுடியாத தொழில்கள். அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்கமுடியாததும் அபாயகரமானதுமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.
08. கேள்விச் சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
09. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
10. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபாரவரி. உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
12. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
13. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமதி.த.தர்சினி,**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

10.04.2025.

(சி-2659)

# ஐ.பி.எல் தொடரில் இருந்து ஓய்வு பெறுவாரா டோனி?



ஐ.பி.எல்லிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து இந்திய அணியின் முன்னாள் தலைவர் மகேந்திரசிங் டோனி மனம் திறந் துள்ளார்.

ஐ.பி.எல் இல் இருந்து டோனி ஓய்வு பெறப் போகிறாரா என்ற தகவல்கள் வேகமாக பரவிய நிலையில், ஐ.பி.எல் இல் இருந்து ஓய்வு பெறுவது தொடர் பான முடிவை எடுக்க இன்னும் 10 மாதங்கள் இருப் பதாக எம்.எஸ். டோனி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டோனி தெரிவிக்கை யில், நான் இன்னும் ஐ.பி.எல் தொடரில் விளையாடிக் கொண்டிருக் கிறேன்.

ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே நான் விளையாடு கிறேன்.

எனக்கு தற்போது 43 வயதாகிறது. நடப்பு ஐ.பி.எல் தொடரின் முடிவில் எனக்கு 44 வயதாகி இருக்கும்.

அதனால், அடுத்த ஐ.பி.எல் சீசனில் விளையாடுவதா அல்லது வேண்டாமா என் பதை முடிவு செய்ய எனக்கு இன்னும் 10 மாதங்கள் இருக்கின்றன.

ஐ.பி.எல் தொடரில் விளை யாட வேண்டும் என்பதை நான் முடிவு செய்ய வேண்டும் எனக் கூறுவதைக் காட்டிலும், எனது உடல் தான் நான் விளையாட வேண்டுமா அல் லது வேண்டாமா என்பதை முடிவு செய்ய வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜூலி சங் - சஜித் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கு இடையே நேற்று புதன்கிழமை விசேட சந்திப்பு இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது அமெ ரிக்க - இலங்கை வர்த்தகத் தொடர்பை சமநிலையில் முன்னேற் றுவது தொடர்பாக இருவரும் கலந்துரையாடினர்.

ஒரு நியாயமான வர்த்தக இயக்கவியல் இரு நாடுகளுக்கு மான பொருளாதார வளர்ச்சி மற் றும் வேலைவாய்ப்பினை உரு வாக்கும் என இக்கலந்துரையாடல் தொடர் பாக ஜூலி சங் தனது எக்ஸ் (X) தளத்தில் குறிப்பிட்டுள் ளார். (நி-8)

# மோடியை சந்தித்தார் நாமல் ராஜபக்ச

(கொழும்பு)

இலங்கை பொதுஜன பெரமுன வின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துள் ளார்.

இந்தியாவில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான, ரைசிங் பாரத் உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

இது தொடர்பில் நாமல் ராஜபக்ச தனது எக்ஸ் பக்கத்தில் நேற்று முன் தினம் பதிவொன்றை வெளி யிட்டுள்ளார்.

குறித்த பதிவில், பிரதமர் நரேந்திர மோடியின் வலுவான தலைமையின் கீழ் இந்தியாவின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருவதால் நவீன உலகில் இந்தியா அதிக உயரங்களை எட்டியுள் ளது என அவர் தெரிவித்துள் ளார். (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 350 | 350 | 400-450 | 600 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 550 | 600 | 450 | 600 |
| தக்காளி | 450 | 400 | 400 | 250-300 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 250-300 | 200 |
| கோவா | 300 | 300 | 300 | 280 | 320 |
| கரட் | 650 | 450 | 500 | 400 | 500 |
| பூசணி | 200 | 200 | 160 | 180-200 | 200 |
| புடோல் | 200 | 200 | 250 | 220 | 320 |
| வாழைக்காய் | 150 | 100 | 100 | 80 | 140 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 250 | 150-250 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 150 | 160 |
| பாகற்காய் | 450 | 500 | 600 | 450 | 600 |
| வெண்டக்காய் | 350 | 350 | 250 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 400 | 250 | -- | 320 |
| பயற்றங்காய் | 250 | 250 | 250 | 250 | 350 |
| லீக்ஸ் | 350 | 250 | 300 | 200 | 250 |
| பீற்றூட் | 400 | 400 | 400 | 300 | 400 |
| கறிமிளகாய் | 650 | 450 | 450 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 2500 | 2500 | 1600 | 1500-2000 | 2500 |
| போஞ்சி | 450 | 500 | 500 | 350 | 700 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | 300 | -- | 500 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 150 | 90 | 150 |
| தேசிக்காய் | 200 | 100 | 200 | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 250 | 150 | 150-220 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 800 | 500 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 300 | -- | 600 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 70 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 100 | 200 |

## இன்று ஒரு தகவல் 354



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஆசை

எனக்கு வாழ்க்கையிலே ஒரே ஒரு ஆசைதான் சேர் என்றார் ஒருவர். அது என்ன ஆசை என்று கேட்டேன்.

ஆசைகளை ஒழித்துவிட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை என்றான்.

இப்படி ஆசைகளை ஒழிக்க வேண்டும் என்பதில் ஆசை கொள்வது தவறு என்கிறார் ஒரு பெரியவர்.

இதுமாதிரி ஆசைகளை ஒழிக்க ஆசைப்பட்டால் அந்த நோக்கம் நிறைவேறாதாம். அந்த முயற்சியிலே புதிதாக சில துன்பங்கள்தான் வந்து சேரும்.

ஆசைகளைத் தானாக விழ வைத்து விடலாம். அதற்கு வழி என்ன தெரியுமா? எந்த ஒரு ஆசையையுமே பூரணமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாது என்பதை உணரவேண்டும். உணர்ந்தால் ஆசைகள் தானாக விழுந்துவிடும்.

அதை விட்டுவிட்டு ஆசைகளை விட்டுவிட வேண்டும் என்பதில் ஒரு ஆசையை வைத்துக்கொண்டு அதற்காக கடுமையான முயற்சிகளையும் செய்துகொண்டு நான் ஆசைகளை விட்டுவிட்டு ஞானோதயம் அடைவதற்கு கடுமையான முயற்சி செய்கிறேன் சேர் என்று சொல்லிக் கொண்டிருந்தால் எந்தக் காலத்திலும் ஞானோதயம் வரப்போவதில்லை. அதற்குப் பதிலாக துன்பம் தான் வந்து சேரும் என்பது அவருடைய கருத்து.

எந்த ஒரு ஆசையையும் பூரணமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாது என்பதை உணரவேண்டும். அது சிந்திக்க வேண்டிய ஒரு விடயம்.

ஒரு ராஜா அவர் மனதிலே எப்போதும் அமைதியில்லை என்று கஷ்டப்பட்டுக்கொண்டே இருந்தார். இந்தத் துன்பத்தைப் போக்குவதற்கு பல வழிகள் எல்லாம் செய்து பார்த்தார். ஒன்றும் சரியாக வரவில்லை. கடைசியாக ஒரு காரியம் செய்தார். அதாவது ஒரு வேதாந்தியைத் தேடிப் போனார். அவரைப் பார்த்துக் கேட்டார்.

ஐயா என்னுடைய துன்பங்களில் இருந்து நான் விடுபட வேண்டும். அதற்கு சுலபமாக ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்கள் என்று கேட்டார்.

அதற்கு அந்த வேதாந்தி சொன்னார். அதற்கு ஒரு வழி இருக்கிறது. அது மாதிரி செய்! அதாவது உன் இராஜ்ஜியத்திற்குள்ளே போதும் என்னும் மனதுடன் வாழும் ஒருவனைக் கண்டுபிடித்து அவனுடைய சட்டையை வாங்கிப் போட்டுக்கொள்ள வேண்டும்.

அப்படி போட்டால் உன்னுடைய துன்பம் தீர்ந்துவிடும் என்றார். உடனே ராஜாவுக்கு மிகவும் மகிழ்ச்சி.

அரண்மனையிலே இருந்த அத்தனை பேரையும் ஆளுக்கு ஒரு பக்கமாக அனுப்பினார். தேடச் சொன்னார்.

போதும் என்கிற மனதுடைய ஒருவனைப் பிடித்து கொண்டு வரச் சொன்னான்.

எங்கெங்கோ எல்லாம் தேடி கடைசியாக ஒரு ஆளைக் கண்டுபிடித்து அவன் போதும் என்கிற மனதுடன் இருக்கிறவன் தான். ஆனால் அவனிடம் சட்டை எதுவும் இல்லை கட்டியிருக்கிற துண்டே போதும் எனும் மனதுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

சட்டை இருந்தால் தான் ராஜா வாங்கி போட முடியும். அந்த வேதாந்தி ஏன் அப்படிச் சொன்னார் என்று ராஜாவுக்குப் புரிந்தது.

இதுவரைக்கும் சொல்லியதெல்லாம் ஞானமார்க்கத்தைத் தேடிக் கொண்டிருக்கிறவர்களுக்கான தகவல். இன்றைய இளைஞர்கள் இதைக் கேட்டுவிட்டு நமக்கு ஆசையே வேண்டாம் என்று முடிவுசெய்துவிட்டால் வாழ்க்கையில் முன்னேறவே முடியாது. அதனால் நாம் படுகிற ஆசையிலே ஒரு நியாயம் இருக்க வேண்டும்.

ஒரு ஆள் ஒரு கடை வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு பேராசை மிகவும் பணம் சேர்க்க வேண்டும் என்று.

திடீரென்று ஒருநாள் அவருக்கு உடம்பு சுகமில்லாமல் போய்விட்டது. இனிமேல் பிழைப்பது கஷ்டம் என்னும் நிலைமை.

மரணப்படுக்கையிலே இருந்தார். சொந்தக்காரர்கள் எல்லாம் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள்.

இவன் மெதுவாக கண்ணைத் திறந்து என் மனைவி எங்கே என்றான். இங்கே தான் இருக்கிறேன் என்றாள் அந்த அம்மா.

என் பிள்ளைகள் எல்லாம் எங்கே என்றான். இதோ பக்கத்திலே தான் இருக்கிறார்கள் என்றாள்.

என் மகள் எங்கே என்றான். எல்லோரும் இங்கே தான் இருக்கிறார்கள். நீங்கள் கவலைப்படாமல் தூங்குங்கள் என்றாள் அந்த அம்மா.

அவன் மெதுவாக கஷ்டப்பட்டு வாயைத் திறந்து அடப்பாவிங்களா? எல்லோரும் இங்கே இருந்தால் அங்கே என் கடையை யார் கவனிப்பார்கள் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்


# பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர்

744





சிலர் உன் குலத்து முன்னோரில் மிகப் புகழ் பெற்ற கரிகால் வளவன் பெயரை இடவேண்டும் என்றார்கள். நானும் இன்னும் சிலரும் உன் பெரிய பாட்டனார் இராஜாதித்தியர் பெயரைத் தான் வைக்க வேண்டும் என்று வற்புறுத்தினோம். கடைசியில் இரண்டையும் சேர்த்து 'ஆதித்த கரிகாலன்' என்று உனக்கு நாமகரணம் செய்தார்கள்."

"அதோ பார்! ஆதித்தா! திருநாவலூரின் கோவில் சிகரம் தெரிகிறது. நம்பி ஆரூரர் சுந்தரமூர்த்தி அடிகள் பிறந்த ஸ்தலம் அது. அங்கே, இன்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் உன் பெரிய பாட்டனார் இராஜாதித்ய சோழர் முகாம் செய்திருந்தார். கதைகளிலும் காவியங்களிலும் வரும் எத்தனையோ வீரர்களைப் பற்றிக் கேட்டறிந்திருக்கிறேன்.

இந்த வீரத் தமிழகத்தில் எவ்வளவோ வீரர்களைப் பார்த்துமிருக்கிறேன். ஆனால் இராஜாதித்யரைப் போன்ற இன்னொரு வீரரைப் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை. போர்க்களத்தில் அவர் போர் செய்வதைப் பார்த்தவர்கள் யாராயிருந்தாலும், அப்படித்தான் சொல்லுவார்கள்."

"ஒரு மாபெரும் சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு வடநாட்டின் மீது படையெடுத்துச் செல்ல அவர் இங்கே ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். இரட்டை மண்டலத்து அரசனாகிய கன்னர தேவனை முறியடித்து, மானியகேடம் என்னும் அவனுடைய தலைநகரைத் தரை மட்டமாக்க வேண்டும் என்று அவர் உறுதி கொண்டிருந்தார். முன்னொரு காலத்தில் பல்லவ குலத்து மாமல்ல சக்கரவர்த்தி வாதாபி நகரை அழித்தது போல், மானியகேட நகரை அடியோடு அழித்தால் தான் இரட்டை மண்டலத்தாரின் கொட்டம் அடங்கும் என்றும், தானும் மாமல்லரைப்போல் புகழ் பெறலாம் என்றும் இராஜாதித்யர் எண்ணினார்.

அதற்கு வேண்டிய மாபெரும் சைன்யத்தைத் திரட்டுவதென்றால் இலேசான காரியமா? மாமல்லர் ஏழு வருடகாலம் படை திரட்டியதாகச் சொல்லுவார்கள்.

அவ்வளவு காலம் தனக்கு வேண்டியதில்லையென்றும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் போதும் என்றும் இராஜாதித்யர் கூறினார். படை திரட்டிச் சேர்ப்பதற்கும், திரட்டிய படைகளுக்குப் போர்ப்பயிற்சி தருவதற்கும், தகுந்த பிரதேசம் இந்தக் கெடிலம் ஆற்றுக்கும் தென்பெண்ணை நதிக்கும் இடைப்பட்ட நாடு தான் என்று தேர்ந்தெடுத்தார்."

"ஆதித்தா! அந்த நாளில் இந்த இரு நதிகளுக்கும் இடையிலுள்ள பிரதேசத்தை நீ பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. அந்தக் காட்சிகளைப் பார்த்தவர்களோ, உயிர் உள்ளவரையில் அதை மறக்க மாட்டார்கள். திருநாவலூரில் இராஜாதித்யர் முப்பதினாயிரம் வீரர்களுடன் தங்கியிருந்தார். பெண்ணை ஆற்றங்கரையில் முடியூரில் சேர நாட்டுச் சிற்றரசன் வெள்ளன் குமரன் இருபதினாயிரம் வீரர்களுடன் முகாம் செய்திருந்தான்.


உன் பாட்டன் அரிஞ்சயன் என்னுடன் திருக்கோவலூரில் இருந்தான். நானும், அரிஞ்சயனும் ஐம்பதினாயிரம் வீரர்களை ஆயத்தம் செய்தோம்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கழுதை திருடர்கள்



ஒரு ஊரில் ஒரு விவசாயி இருந்தார், அவருடைய விவசாய நிலத்தில் விளைந்த பொருட்களை எல்லாம் சந்தைக்குக் கொண்டு போக ஒரு கழுதை வாங்க வேண்டும் என்று முடிவு செய்தார். அதனால் சந்தைக்கு போய் ஒரு நல்ல கழுதையை விலை கொடுத்து வாங்கினார். காட்டு வழியாக அவர் தன்னுடைய வீட்டுக்கு நடந்து போகும் போது மூன்று திருடர்கள் அந்த விவசாயியைப் பார்த்தார்கள்.

அவரிடம் இருந்து அந்தக் கழுதையை எப்படியாவது திருட வேண்டும் என்று முடிவு செய்தார்கள். ஆனால் அந்த நாட்டை ஆண்ட ராஜா மிகவும் கண்டிப்பானவராக இருந்தார். திருடர்கள் எல்லோருக்கும் மிகப் பெரிய தண்டனைகளைக் கொடுத்தார்.

அதை நினைத்த மூன்று திருடர்களும் பயந்தார்கள். இருந்தாலும் திட்டம் போட்டு அந்த விவசாயியை ஏமாற்ற நினைத்தார்கள். அப்போது தான் கழுதை திருட்டு போனதை ராஜாவிடம் போய் அந்த விவசாயி சொல்ல மாட்டார். நமக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று நினைத்தார்கள். வெயில் அதிகமாக இருந்ததால் ஒரு மரத்தடியில் படுத்து ஓய்வெடுக்க ஆரம்பித்தார் அந்த விவசாயி. அப்போது ஒரு திருடன் அவர் கூடவே ஓய்வெடுக்கின்ற மாதிரி நடித்தான்.

அப்படியே விவசாயியிடம் கொஞ்சம் பேச்சும் கொடுத்தான். இந்த காட்டில் மிருகங்கள் மாதிரி உருமாறுகின்ற ராட்சசன் இருக்கின்றானாம். அவனைப் பார்த்தால் எல்லோரும் ஓடிவிடுவார்களாம் என்று சொன்னான் அந்தத் திருடன். அதைக் கேட்ட விவசாயி அதை நம்பாமல் சிரித்து விட்டு கொஞ்ச நேரத்தில் தூங்க ஆரம்பித்தார் அந்த விவசாயி. அப்போது இன்னொரு திருடன் அங்கே வந்து கழுதையைக் கட்டி இருந்த கயிற்றை கழட்டி தன்னுடைய கழுத்தில் மாட்டிக் கொண்டான்.

இன்னொரு திருடன் அந்தக் கழுதையை வேறு பக்கம் இழுத்துக் கொண்டு போய் விட்டான். கொஞ்ச நேரத்திற்குப் பின் தூக்கத்தில் இருந்த விவசாயி அந்தத் திருடனை பார்த்தார். கழுதைக்கு பதிலாக ஒரு மனிதன் இருக்கிறானே என்று சத்தம் போட ஆரம்பித்தார். உடனே பக்கத்தில் இருந்த திருடன் அடடா இதுதான் அந்த மிருகங்கள் மாதிரி உருமாறுகின்ற ராட்சசன் போல் இருக்கு வாருங்கள் ஓடி விடலாம் என்று சொல்லி விட்டு ஓட ஆரம்பித்தான்.

விவசாயியும் வேறு பக்கம் ஓட ஆரம்பித்தார். விவசாயி போனதற்குப்பின் தங்களின் புத்திசாலித்தனத்தால் விவசாயியை ஏமாற்றிய அந்த மூன்று திருடர்களும் அந்தக் கழுதையை சந்தையில் விற்று வந்த பணத்தை பங்கு பிரித்துக் கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இடைக்காடன் பிணக்குத் தீர்த்த ஈசன் இன்று பிணை கோரி நீதிமன்ற வாயிலில் நிற்கக் கண்டேன். – நவயுகசித்தாந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிணக்கைத் தீர்த்த ஆலயங்கள் இப்போ நீதிமன்றத் தீர்ப்புக்காக...

கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்கிறது நம் தமிழ் மொழி.

ஆக, கோயில்கள் இல்லாத இடங்கள் அடவிக் காடுகள் என்றே கருதப்பட்டன.

பொதுவில் மனித வாழ்வு என்பது இறை வழிபாட்டில் இருந்து தொடங்குகிறது.

ஆதிகாலத்தில் இயற்கையை வழிபட்ட மனிதன் காலப்போக்கில் அண்டம் கடந்த பொருளை தன் சிந்தையால் உணர்ந்து கொள்கிறான்.

இங்குதான் ஆலயம் எனும் வழிபாட்டுத் தலங்கள் உற்பவமாகின்றன.

அதிலும் குறிப்பாக வழிபாட்டுத் தலங்கள் அடிப்படை அறிவியலை, ஆன்மீகத்தை, அன்புடைமையை எடுத்தியம்பின.

கூடவே ஆலய வழிபாடுகள், அங்கு நடைபெறும் உற்சவங்கள் மக்களின் ஒற்றுமையையும் மனித சமூகம் ஒன்றுசேர்ந்து வாழ்வதன் அவசியத்தையும் வலியுறுத்துவதாக அமைகின்றன.

இதையும் கடந்து, இறை நம்பிக்கையானது தோல்விகளைக் கடந்து செல்வதற்கும் துன்பங்களை ஏற்று அதனைச் சகித்து வாழ்வதற்கும் மிகவும் அவசியமாயிற்று.

ஊர் கூடித் தேர் இழுக்கும் உற்சவம் ஆன்மீக ரீதியில் மக்களை ஒன்றுபடுத்துவதற்கானது.

இவை ஒருபுறமிருக்க, மனித வாழ்வியலில் ஏற்படக்கூடிய முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கின்ற நீதிமன்றங்களாகவும் ஆலயங்களே விளங்கின.

கற்பூரத்தை அணைத்து சத்தியம் செய்கின்ற அந்த நடைமுறை எத்தனையோ பிணக்குகளைத் தீர்த்து வைத்தன.

என்ன செய்வது எழுச்சி பெற்ற நாகரிகம் தலைகீழாக மாறியபோது, கடவுள் மீதான நம்பிக்கை இல்லாமல் போய், ஆலயங்கள் அதிகாரம் செலுத்துகின்ற பதவிக்குரிய தலங்களாக மாறின.

அந்தோ! கொடுமை. மக்களிடையே பிணக்குகளைத் தீர்த்து வைத்த சைவாலயங்கள் இன்று நீதிமன்றப்படி ஏறி தீர்ப்புக்காகக் காத்துக் கிடக்கின்றன.

நீயா! நானா! என்ற போட்டியும் அதீத பொருளாதார வசதிகளும் ஒருங்குசேர, இறை நம்பிக்கை அறவே இல்லாமல்போய்; இப்போது ஆலய உரிமைச் சண்டையும் திருவிழா உபயச் சண்டையுமே எஞ்சி நிற்கின்றன.

ஒருபுறத்தில் தர்மகர்த்தா சபை. மறுபுறத்தில் தொண்டர் சபை. இவர்களுக்கிடையே கயிறு இழுத்தல் நடக்க, திருவிழா நின்றுபோக, வழிபாடுகளும் தடைப்படலாயின.

என்ன செய்வோம். உலகமெலாம் விளங்க வேண்டிய மேன்மைகொள் சைவ நீதி இன்று நீதிக்காக நீதிமன்றப்படியேறி தவம் கிடக்கிறது.

யார் என்ன செய்ய முடியும். அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையாரும் இணுவில் கந்தனும் நேரடியாகக் களத்தில் இறங்கினாலேயன்றி வேறு எதுவும் செய்ய முடியாது.

# அரச அதிகாரிகள் நேர்மையாக செயற்பட்டால் அரசியல்வாதிகளால் கொள்ளையிட முடியாது

## முன்னாள் அமைச்சர் அலி சப்ரி சாட்டை

அரச அதிகாரிகள் அவர்களது செயற்திறனின்மை மற்றும் தோல்வி என்பவற்றை மறைத்துக்கொள்வதற்கு "அரசியல் ஊழலை" ஒரு கேடயமாகப் பயன்படுத்தக்கூடாது என வலியுறுத்தியிருக்கும் முன்னாள் வெளிவிகார அமைச்சர் அலி சப்ரி, அரச அதிகாரிகள் எவ்வித அச்சமும் பக்க சார்புமின்றி அவர்களது பணிகளை முன்னெடுப்பார்களாயின் எந்தவொரு அரசியல்வாதியினாலும் அரச சொத்துக்களைக் கொள்ளையிட முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளில் அரச அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக முன்னாள் கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கருத்துத் தொடர்பில் எக்ஸ் தளப் பதிவொன்றைச் செய்திருக்கும் முன்னாள் அமைச்சர் அலி சப்ரி அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரச அதிகாரிகள் ஊழல் மோசடிகளில் தொடர்புபட்டிருப்பதாக முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டிருக்கிறார். இதனை நாம் நீண்டகாலமாகக் கூறிவருகிறோம்.

ஊழல் மோசடிகளில் அரசியல்வாதிகள் ஒரு அங்கமாக இருக்கிறார்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. இருப்பினும் இம்மோசடிகளில் அரசியல்வாதிகள் மாத்திரம் தனித்து ஈடுபடமுடியாது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

பல்வேறு மோசடிகள் பல்வேறு மட்டங்களில் இடம்பெறக்கூடும். அவற்றில் பெரும்பங்கானவை அரசியல்வாதிகளுக்குத் தெரியாமலோ அல்லது அவர்களின் நேரடித் தொடர்பின்றியோ நடைபெறுகின்றன. பொதுமக்கள் அரசியல்வாதிகள் மீது கொண்டிருக்கும் கோபத்தின் பின்னால் ஒளிந்துகொள்ளக்கூடிய திறன்மிகுந்த ஊழல் அரச அதிகாரிகள் பலர் இருக்கிறார்கள்.

இதன் அர்த்தம் அரசியல்வாதிகள் ஊழலற்றவர்கள் என்பதல்ல. இருப்பினும் அரச அதிகாரிகள் எவ்வித அச்சமும் பக்கசார்புமின்றி அவர்களது பணிகளை முன்னெடுப்பார்களாயின் எந்தவொரு அரசியல்வாதியினாலும் அரச சொத்துக்களைக் கொள்ளையிடமுடியாது. நிர்வாக மட்டத்தில் நிலவும் நேர்மைத்தன்மையும் தொழில்சார்நேர்த்தியும் மிகவலுவான தடுப்பு அரண்களாகும்.

அதேபோன்று அரச அதிகாரிகள் அவர்களது செயற்திறனின்மை மற்றும் தோல்வி என்பவற்றை மறைத்துக் கொள்வதற்கு "அரசியல் ஊழலை'' ஒரு கேடயமாகப் பயன்படுத்தக் கூடாது. மாறாக சகல மட்டங்களிலும் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படுவது அவசியம் என வலியுறுத்தியுள்ளார்.

(ம-4,7)

அமெரிக்க வரி தொடர்பில்

# உசார் நிலையில் உலகநாடுகள் மந்தகதி நிலையில் இலங்கை

## அரசாங்கத்தின் அசமந்தப்போக்கை சாடுகிறார் நாமல் எம்.பி

அமெரிக்காவினால் இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ள புதிய தீர்வை வரி தொடர்பில் அரசாங்கம் மந்தகரமாகச் செயற்படுகிறது. வரி விதிக்கப்பட்டதன் பின்னர் தான் குழு நியமிக்கப்பட்டுள்ளது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப்புதன் கிழமை (09) நடைபெற்ற சேர் பெறுமதி (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

தீர்வை வரி உலகளாவிய ரீதியில் தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. இலங்கையின் சேவை மற்றும் இதர துறைகளும் பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டிய சாத்தியம் காணப்படுகிறது.

அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கையினால் பெரும்பாலான வலய நாடுகள் திறந்த பொருளாதார கொள்கைக்கு அப்பாற்பட்டு செயற்பட உத்தேசித்துள்ளன. நாடு என்ற ரீதியில் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை வெற்றி கொள்வது என்பது அரசாங்கத்துக்கு சவால்மிக்கது. அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள 44 சதவீதத் தீர்வை வரியை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது. அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கை தொடர்பில் பெரும்பாலான நாடுகள் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இருந்தே அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன.

ஆனால் இங்கு வரி விதிக்கப்பட்டதன் பின்னரே அரசாங்கம் குழு அமைத்து ஆய்வு செய்யத் தீர்மானித்துள்ளது. அமெரிக்காவின் தீர்மானம் இலங்கையின் பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும். நெருக்கடியான நிலைமையை முகாமைத்துவம் செய்வதற்கு அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். தொழிற்சங்கங்களைத் தூண்டிவிட்டு வீதிக்கு இறக்கி மக்களை நெருக்கடிக்குள்ளாக்கமாட்டோம். பெரும்பான்மைபலத்தை வைத்துக் கொண்டு எவ்வாறு அமெரிக்காவின் தீர்மானத்தை முகாமைத்துவம் செய்வது என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

(ம-4,7)

# யாழ்.பல்கலையில் இன்று நாட்டிய நாடகப்போட்டி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள்பீட நடனத்துறையின் ஏற்பாட்டில் நாட்டிய நாடகப் போட்டி 2025 ஆனது இன்று வியாழக்கிழமை மாலை 3.15 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

நடனத்துறைத் தலைவர் செல்வி மைதிலி அருளையா தலைமை தாங்கும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(ம-4,7)

# பங்குனி உத்தர இலட்சார்ச்சனை

கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் பங்குனி உத்தர இலட்சார்ச்சனை பெருவிழாவின் பத்தாம் நாளான இன்று வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு பாற்குடப் பவனியும் அதனைத் தொடர்ந்து 64 உபசார விசேட பூஜை வழிபாடுகளுடன் இலட்சார்ச்சனை பூர்த்தியும் இடம்பெறும்.

பங்குனி உத்தர நன்னாளான நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் நவோத்திர சகஸ்ர (1008) சங்காபிசேகம் நடைபெறும்.

மாலை வசந்த மண்டபப் பூஜை, திருவூஞ்சல் இடம்பெற்று அம்பிகை விநாயகப் பெருமான், முருகப்பெருமானுடன் அழகிய பூந்தண்டிகையில் எழுந்தருளி உலா வரும் காட்சி இடம் பெறும்.

(ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20-இருபது கிரிக்கெட் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி திரில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

அருட்தந்தை G.A பிரான்சிஸ் ஜோசப் அடிகள் ஞாபகார்த்த (20-இருபது) கிரிக்கெட் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 4 இலக்குகளால் திரில் வெற்றி பெற்றது.




யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான அருட்தந்தை G.A பிரான்சிஸ் ஜோசப் அடிகள் ஞாபகார்த்த 5 ஆவது (20-இருபது) கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக அவ் அணியின் அணித் தலைவர் எஸ்.மதுஷன் 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

134 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 19.5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்று 4 இலக்குகளால் திரில் வெற்றி பெற்றது.

இதன்போது போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணித்தலைவர் எஸ்.மதுஷனும். சிறந்த பந்து வீச்சாளராகவும் சிறந்த களத்தடுப்பாளராகவும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த கே. சாருஷனும் போட்டியின் சிறந்த ஆட்ட நாயகனாக சென் பற்றிக்ஸ் கல்லூரி அணித் தலைவர் பீ. மதுஷனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதுவரை நடந்த (20-இருபது) 5 போட்டிகளில் 4 போட்டிகளில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் ஒரு போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# வங்கிகளுக்கு இடையிலான துடுப்பாட்டச் சுற்றுத் தொடரில்

## கொமர்ஷல் வங்கி முதலிடம்



(சாவகச்சேரி)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்தில் உள்ள வங்கிகளுக்கு இடையே நடத்தப்பட்ட துடுப்பாட்ட சுற்றுத் தொடரில் கொமர்ஷல் வங்கி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மக்கள் வங்கியை 38 ஓட்டங்களால் வீழ்த்தி கொமர்ஷல் வங்கி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

எட்டு வங்கிகள் பங்கெடுத்த மேற்படி தொடரில் இரண்டாம் இடத்தை மக்கள் வங்கியும், மூன்றாம் இடத்தை ஹற்றன் நஷனல் வங்கியும் பெற்றுக் கொண்டுள்ளன.

இலங்கை வங்கியின் பிரதான அனுசரணையுடன் இடம் பெற்ற மேற்படித் தொடரின் இறுதிப்போட்டியில் பிரதம விருந்தினராக ரோட்டரி உதவி ஆளுநர் ரோட்டரியன் ரகுராமும், சிறப்பு விருந்தினராக சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் துஸ்யந்தனும், கௌரவ விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வசந்தனும் கலந்து சிறப்பித்திருந்தனர். (6-30)

# உதைபந்தாட்டப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக் கழகம் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் மற்றும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுமதியுடன் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட யாழின்நாயகன் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு ரெட் றேஞ்சஸ் அணியை எதிர்த்து திருமகள் அணியும் பிற்பகல் 4.45 மணிக்கு ஊரெழு பாரதி அணியை எதிர்த்து உதய சூரியன் அணியும் மோதவுள்ளன. (6-8-90)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3322

### அனிஸ்ரா


ஸ்கூலில தனியா மாட்டினாத்தான் கஷ்டம்



நண்பர்களோடு குருப்பா மாட்டினால் அதுல ஒரு சந்தோசம்!

### சுஸ்மிதா

நல்லதே நினைச்சால் நல்லதே நடக்கும் என்று சொல்லுறாங்கள்...



நான் எது, எது நடக்கக் கூடாது என்று நினைக்கிறனோ, அது மட்டும் கரெக்டா நடக்குதே ஏன்...?

### கிருஷிகா

மனைவியிடம் கோபப்படுங்க...



ஆனால் அதுக்கு முன்னால சோற்றை சாப்பிட்டுவிடுங்க இல்லை என்றால் பிறகு கிடைக்காது...!

### இந்துஜா

சீரியஸான, படபடப்பான, அங்க இங்க திரும்ப முடியாத செக்யூரிட்டி வேலை என்பது



மனைவிமார் நம்மை, பால் பொங்கிடாமல் பார்க்க நிற்க வைப்பது தான்...

### எழிலினி

இட்லியின் சுவை இட்லியில் இல்லை தொட்டுக்க வைக்கும் சட்னியில் தான் இருக்கும்...



அது போல தான் வாழ்க்கையும் நம்மகூட வாழ்பவர்களை பொறுத்துத்தான் சந்தோஷம்...

### பிருந்தா

ஒரு ரூபாய் காசு கொய்ன் பொக்ஸில பேசினவங்களுக்குத் தான் தெரியும்



ஒரு நிமிசத்தோட மதிப்பு என்ன என்று!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 304 கிலோ..

கஞ்சா கடத்தலுக்காகப் பயன்படுத்தப்பட்ட படகுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைக் கடற்படையினர், கிளிநொச்சி-உடுத்துறை விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து நேற்று முன்தினம் (08) அதிகாலை நடத்தப்பட்ட சிறப்பு கூட்டுத் தேடுதல் நடவடிக்கையின்போது கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாத் தொகையின் பெறுமதியானது 121 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் முல்லியான் பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ம-7,4)

## மின்சாரம்..

இதில் ஓமந்தை பன்றிக்கெய்த குளம் பகுதியைச் சேர்ந்த 50 வயதான குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் நேற்றுக் காலை தனது வீட்டிலுள்ள காற்று அழுத்தும் இயந்திரம் மூலமாக முச்சக்கர வண்டியை சுத்திகரிப்பு செய்து கொண்டிருந்தபோது தவறுதலாக மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்துள்ளார். (ம-7,4)

## நாவற்குழியில்..

சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம்,யாழ்ப்பாணம் மற்றும் அளவெட்டிப் பகுதிகளைச் சேர்ந்த 40,42 மற்றும் 53 வயதான பெண்களும் வீட்டின் உரிமையாளரான 68 வயதான ஆணுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி வீட்டில் விபசார நடவடிக்கை இடம்பெற்றதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்படி சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கைதான நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,4,30)

## பயங்கரவாதச்..

மன்றத்தில் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை இரத்துச்செய்வது மற்றும்புதிய சட்டத்தை உருவாக்குவது குறித்து அரசாங்கம் ஒரு பரந்த ஆலோசனையை மேற்கொள்ளும் என்றார். (ம-7,4)

## புதிய அரசியல..

உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், புதிய அரசியலமைப்பு எப்போது உருவாக்கப்படும் என்பதை அவைக்கு அறிவிக்குமாறு பிரதமரிடம் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ஹரிணி,

இது, தேசிய மக்கள் சக்தியால் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் முக்கிய தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாகும்.

புதிய அரசாங்கம் தற்போது பொருளாதாரத்தை உறுதிப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் இரண்டு தேர்தல்கள் நடைபெற்றுள்ளது. அடுத்த மாதம் மற்றொரு தேர்தல் நடைபெறவுள்ளது. மாகாண சபைத் தேர்தலும் பல ஆண்டுகளுக்கு மேல் நடைபெறாமல் உள்ளது.

மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றவுடன், புதிய அரசியலமைப்பை உருவாக்கும் செயல்முறையை அரசாங்கம் ஆரம்பிக்கும் என்றார்.

மேலும் தற்போதைய அரசாங்கம் இந்த ஆண்டு பாதீட்டுத் திட்டத்தில் புதிய யாப்பு உருவாக்கச் செயல் முறைக்கு நிதி ஒதுக்கவில்லை.

எவ்வாறாயினும், முந்தைய அரசாங்கத்தால் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவு செயல்முறையை தற்போதைய அரசாங்கம் பொதுமக்களின் ஆலோசனைகள் மூலம் தொடர விரும்புவதாகவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய கூறினார்.

எனவே, புதிய அரசியலமைப்பு உருவாக்கம், நியாயமானதொரு காலக்கெடுவிற்குள் நிறைவுசெய்யப்படலாம் என்று தான் கருதுவதாக அவர் கூறினார். (ம-7,4)

## வெளிநாடுகளில்..

ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் அமைச்சர் கூறுகையில்,

"சமீபத்தில் இந்த நாட்டில் ஏராளமான நிதிக் குற்றங்கள் நடந்துள்ளன. பொது நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால் விசாரணை மூலம் இவற்றைக் கண்டுபிடிப்பது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை.

இதுகுறித்து நீண்ட காலமாக விசாரணை நடத்தப்பட்டு வந்தாலும், சட்டக் கட்டமைப்பில் இந்த குற்றவாளிகளை உண்மையில் பிடிக்க இந்த நாட்டில் சில தடைகள் இருந்தன. இந்தச் சட்டம் இந்தத் தடைகளில் பெரும் எண்ணிக்கையை நீக்குவதை சாத்தியமாக்கியுள்ளது. குற்றத்திலிருந்து எழும் சொத்துக்களை மீட்பதற்கான ஏற்பாடுகளை இந்தச் சட்டம் உள்ளடக்கியது.

விசாரணை, அரசாங்க உரிமையைத் தடை செய்தல் மற்றும் உருவாக்கப்பட்ட சொத்துக்களை அப்புறப்படுத்துதல் தொடர்பான சட்டப் பின்னணி இந்த மசோதாவில் உள்ளது.

பல சந்தர்ப்பங்களில் இது போன்ற நிதி மோசடியில் ஈடுபடுபவர்கள் இந்தப்பணத்தை இந்த நாட்டில் அல்ல, வெளிநாடுகளில் முதலீடு செய்கிறார்கள்.

இதுபோன்ற குற்றத்தால் உருவாக்கப்பட்ட சொத்துக்கள் வெளிநாடுகளில் அமைந்திருந்தாலும் கூட, அவற்றைக் கைப்பற்ற இந்தச் சட்டம் எங்களுக்கு உதவுகிறது. இந்த வகையான நிதி மோசடி அல்லது பொதுப் பணம் குறித்து இந்த நாட்டு மக்களுக்குத் தேர்தல்மேடைகளில் அறிவித்துள்ளோம்.

மோசடி குறித்து முறையான விசாரணை மேற்கொள்ளப்படும்.

மேலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்ற வகையில், இந்த நாட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பெரியளவிலான சொத்துக்கள் மற்றும் செல்வங்களை நாட்டிற்குத் திருப்பித் தரும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம்" எனத் தெரிவித்துள்ளார். (ம-7,4)

## தேசிய ஊழல்..

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ, சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க, மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமும் மேல் நீதிமன்ற நீதிபதியுமான ரங்க திஸாநாயக்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதனிடையே, தேசிய ஊழல் எதிர்ப்பு செயற்றிட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உள் விவகாரப் பிரிவு நேற்று ஸ்தாபிக்கப்பட்டது. (ம-7,4)


மஹஜன சம்பத
திகதி 2025.04.09
சீட்டிழுப்பு இலக்கம் 5801
N 1 6 3 1 5 5
அத சம்பத
N 3 1 5 5
சீட்டிழுப்பு இலக்கம் 376
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.04.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1831
R 06 19 50 69 R
Double Chance 07111

மெகா பவர்
திகதி 09/04/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2149
B 18 37 42 49 50

ஜய JAYA
திகதி 2025.04.09
சீட்டிழுப்பு இலக்கம் 069
L 4 1 1 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4043
சீட்டிழுப்பு திகதி 09.04.2025
V 08 22 64 70
V

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.04.09
சீட்டிழுப்பு இலக்கம் 1110
தனுசு 19 27 28 42 தனுசு
95037 17

உத்தியோகபூர்வ முடிவுகள்
09.04.2025 வெற்றி வாரம் 509
ஆங்கில எழுத்து D
9 0 7 0 2 4
67021
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.35,319,029.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2775
சீட்டிழுப்பு திகதி 2025.04.09 தினம் புதன்கிழமை
05 29 30 73 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,786,312.80

சனிதா
திகதி 09.04.2025 வெற்றி வாரம் 4936
02 56 71 76 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,181,587,20
78329

ஜயோதா Jayoda
திகதி 2025.04.09 வெற்றி வாரம் 2119
08 39 41 66 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,884,718.00

சீட்டிழுப்பு வாரம் 4487
சீட்டிழுப்பு திகதி 09.04.2025 தினம் புதன்கிழமை
05 30 48 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,326,690.80
172433

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 01 06 15 53 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.571,794,565.00
1951
09.04.2025 புதன்கிழமை

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2601
சீட்டிழுப்பு திகதி : 2025.04.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,346,154.40
27 28 38 52 Y
487431


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

யாழ். மண்ணில் இல.80/04, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும்

## J.டர்மினி நகைமாடம்

ஆனது அதே கட்டடத்தில் இல.80/08, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நிகழும் மங்கலகரமான குரோதி வருஷம் பங்குனி மாதம் 28ம் நாள் (11.04.2025) வெள்ளிக்கிழமை உத்தர நட்சத்திரமும், சித்தாமிர்த யோகமும் கூடிய காலை 09.00 மணியளவில் புதுப்பொலிவுடன் திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் தங்க நகைகளை கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விஷேட விலைக்கழிவு மற்றும் விஷேட பரிசில்கள் வழங்கப்படும் என்பதனையும் எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்:

**டர்மினி நகைமாடம்**

**இல.80/08, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**074 010 5853**

(C-2657)

## மயூரன் ஆசிரியரின் ஜேர்மன் கல்லூரி



18.11.2024 மற்றும் 27.01.2025 அன்று Goethe institute (German Cultural centre) ஆல் நடாத்தப்பட்ட German (Deutsch A1) பரீட்சையில் எமது கல்லூரி மாணவர்கள் Mr.R.மயூரன் ஆசிரியரிடம் கல்வி கற்று ஒரே தடவையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக இம் மாணவர்களையும் ஆசிரியரையும் ஜேர்மன் கல்லூரி சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



**More details :**

**German Swiss Academy**

No.5/51 A, Kasthuriyar Road, Jaffna.
Branch : Kodikamam Road, Nelliady.
(Near bus stand)

**T.P : 077 6454 998/ 021 7909 946**

(3783)

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி கரவெட்டி அல்வாய் கிழக்கில் 15 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் இருவழிப் பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதி முகப்புடன் பதினேழு இலட்சம் ரூபாய் (17.00 000/=). இரண்டாம் காணி (நடுப் பகுதி) பதினைந்து லட்சம் (15. 00 000/=). பின் பகுதிக் காணி எட்டு லட்சம் ரூபாய் (8,00 000/=)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 ½ Km. பருத்தித்துறை பஸ் நிலையம் 2 Km. மந்திகை ஆஸ்பத்திரி 1 Km, பருத்தித்துறை வீதி 600m, மாலு சந்தி 1 Km தூரம்.
- தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 Km தூரம், மாலு சந்தி பிள்ளையார் கோயில் 1 Km தூரம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி. செம்மண் தரை. நன்னீர் ஊற்று
- கரவெட்டிப் பிரதேச சபை 1Km தூரம்
- தரகர் தேவையில்லை.

(பார்வையிடும் நேரம் காலை 8.00 – மாலை 6.00 மணி வரை)

தொடர்புகளுக்கு:

**076 860 2770, 076 987 8617**
**076 935 3971**

(3914)

## சதாபொன்ஸ் கல்வி நிலையம்

மாலி சந்தி, அல்வாய்.

**SATHAPONS, ALVAI**

**க.பொ.த உ/த 2027**
**வர்த்தகப் பிரிவு ஆரம்பம்**
**12.04.2025 சனிக்கிழமை**
**காலை 8.00 மணி**

| | |
|---|---|
| கணக்கீடு | – V.பகீரதன் |
| வணிகக்கல்வி | – T.லோகேஸ் |
| பொருளியல் | – V.ஜெகதீஸ் |

தொடர்பு : 077 309 5176, 076 126 0105
021 226 3206

(C-2658)

– நிர்வாகி

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.